DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1510
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 14, 2025

# ‘ Justin was in full service to his country ’ - Sophie Trudeau congratulates out going Prime Minister of Canada. She also welcomes Mark Carney on becoming Liberal leader.

# “ஜஸ்டின் தனது தேசத்திற்காக முழுதான சேவையை வழங்கிய வண்ணம் இருந்தார்” – அவரது துணைவியார் சோ.:.பி ட்ரூடோ புகழாரம்.

## லிபரல் கட்சியின் புதிய தலைவரும் பிரதமருமான மார்க் கார்னியையும் வரவேற்று கருத்துக்களைப் பதிவிட்டார்



தனது கணவர் ஜஸ்ரின் ட்ரூடோ பிரதமர் பதவியிலிலுருந்து விலகவும் அதேவேளை லிபரல் கட்சியின் புதிய தலைவராகவும் கனடாவின் புதிய தலைவராகவும் பதவியேற்றுள்ள மார்க் கானி அவர்கள் தலைமையில் புதிய அரசு தனத பணிகளை ஆரம்பிக்க உள்ள இந்த நாட்களில் தனது கணவர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களது துணைவியார் சோ.:.பி ட்ரூடோ அவர்கள் தனது கணவருக்கு புகழாரம் சூட்டி தனது இன்ஸ்ரகிராம் பகுதியில் பதிவுகளை இடம்பெறச் செய்துள்ளார். தனது கணவரை விட்டு அவர் பிரிந்து வாழ்கின்றார் என்ற செய்திகள் வெளிவந்தவண்ணம் இருந்தாலும் சோ.:.பி ட்ரூடோ அவர்களின் பெருந்தன்மையை ஆயிரக்கணக்கான கனடியர்கள் அவரைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் சோ.:.பி ட்ரூடோ அவர்கள் தற்பொழுது கனடியப் பிரதமராகப் பதவியேற்கவுள்ள மார்க் கானி அவர்களையும் வரவேற்று உற்சாகமான வார்த்தைகளைப் பகிர்ந்த கொண்டுள்ளார்.



அவர் தனது இன்ஸரகிராம் பகுதியில் பின்வருமாறு தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டுள்ளார்
ஜஸ்டின் தனது தேசத்திற்காக முழு சேவையையும் வழங்குவதில் தனது பதவிக் காலத்தில் பணியாற்றினார். அதற்காக தன்னை அர்ப்பணிக்கவும் செய்தார்.”
லிபரல் தலைவராகவும், கனடாவின் அடுத்த பிரதமராகவும் மார்க் கார்னியை வாழ்த்துவதற்காக சோ.:.பி கிராகோயர் ட்ரூடோ தனது பதவில் குறிப்பிட்டுள்ளார்.
(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# அல்ஜசீராவில் பொறுப்புக்கூற மறுத்த ரணில் என்னும் மனிதப் பெயர் கொண்ட ‘நரி’



## அல்ஜசீரா தொலைக் காட்சி சார்பில் ‘நரி’யை நேர்காணல் செய்ய மஹ்தி ஹசன் ‘நிகழும் நாட்களின் நேர்மையான ஒரு ஊடகக் கதாநாயகன்’ ஆவார்

சிங்கள பௌத்த அரசுத் தலைவர்கள், அவர்கள் யுத்த வெற்றிவாதிகளாக இருந்தாலும் சரி, அல்லது லிபரல் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சமூக நீதி முகமூடி அல்லது மாற்றத்தின் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி,எல்லாருமே தமிழ் மக்களுக்கோ அல்லது இறந்த காலத்துக்கோ பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பதைத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் அல் ஜஸீரா நிகழ்ச்சி உலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது. (தொடர்ச்சி ம் பக்கம்)

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN உதயன்

விருது

UTHAYAN AWARD

Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025

**Time:** 6:00 PM

**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

- Uthayan Literary and Artistic Exuberance Award
- Uthayan Inter-Communal Relationship Award
- Uthayan Business Entrepreneur Award - Ontario
- Uthayan Business Entrepreneur Award - Quebec
- Uthayan Leadership Award
- Uthayan Youth Icon Award
- Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
- Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடவுள்ள பிரதான தமிழ் பேசும் வேட்பாளர்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் வாக்களிக்க வேண்டும்

இலங்கையில் நீண்ட நாட்களாக அரசியல்வாதிகளாலும் மக்களாலும் எதிர்பார்க்கப்பட்டு வந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தீவின் நான்கு திசைகளிலும் அரசியல் கட்சிகளுக்கு பின்னால் நின்று "சுகபோகங்களை - அனுபவித்தவர்களும், எவ்வித ஊழல்களும் அற்ற
அரசியல் நோக்கோடு மக்கள் சேவையாற்றவென துடிப்போடு அரசியலில் ஈடுபாடு கொண்ட அன்பர்களுமாக பலர் "தூசு தட்டிக் கொண்டு" எழுந்து நிற்பதை நாம் எங்கிருந்தாலும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது
ஓரே சின்னத்தின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் உள்ளிட்ட மொத்தம் ஒன்பது கட்சிகள் ஒன்றிணைந்து வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் போட்டியிடும் நோக்கோடு அந்த கூட்டை தொடரால் என்று எதிர்வு கூறப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளோடு கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் இந்தக் கூட்டுக்குள் அடங்கும் என்று கூறப்பட்டது.மேலும், முன்பு தமிழரசுக் கட்சிக்குள் இருந்த சரவணபவன், தவராசா ஆகியோரின் சுயேச்சைக் குழுவும் இந்த கூட்டுக்குள் வருவதாகக் கூறப்பட்டது.

இந்த முயற்சிகளும் ஒன்று மற்றதற்கு ஆதரவாக இல்லை என்று கருதத்தக்க விதத்தில்தான் நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவாகிய கூட்டு தேசிய மக்கள் சக்திக்கு எதிரானது மட்டுமல்ல கஜேந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான உறவிற்கும் எதிரானதா என்ற கேள்விக்கு விடை மிக முக்கியம். எனவே இரண்டு கூட்டுக்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழ்த் தேசிய வாக்குகளை அவர்கள் ஒன்று திரட்டுவார்களா அல்லது சிதறடிக்கப் போகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.
இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் அண்மையில் கூடிய சில அன்பர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது மிகுந்த அவதானத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் குறிப்பான வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றால் அதன் முதல்வர் வேட்பாளராக அமர்த்தப்பட வேண்டியவர்களில் முக்கியமாக அருந்தவபாலன மற்றும் அவரைப் போன்று நேர்மையாகச் செயற்பட்டு தோற்கடிக்கப்பட்டவர்களின் பெயர்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

இது தொடர்பாக மேலும் கிடைக்கும் தகவல்களின்படி, மன்னாரைச் சேர்ந்த சிவகரனும் காணப்படுகிறார். இவரும் மன்னாரில் மக்கள் நலன் தொடர்பான விடயங்களில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஏற்கனவே இது தொடர்பாகச் சந்தித்துப் பேசியிருப்பதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.
அருந்தவபாலன் கூட்டமைப்புக்குள் இருந்தபொழுது சுமந்திரனால் அவமதிக்கப்பட்டு அதிலிருந்து வெளியேறியவர்.அவருக்கென்று தென் மாராட்சியில் வாக்கு வங்கி ஒன்று உண்டு. ஆனால் அவர் பெருமளவுக்குத் துடிப்பாகச் செயல்படாத ஒரு பின்னணியில், அவருடைய வாக்கு வங்கி தொடர்ந்து பலமாக உள்ளதா இல்லையா என்ற சந்தேகங்கள் உண்டு. இப்படிப் பார்த்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக தமிழ்க் கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புக்களை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இந்த விடயத்தில் சற்று முன்கூட்டியே தமிழ்க் கட்சிகள் சிந்தித்திருப்பது சாதகமானது.
ஆனால் மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளும் சந்திப்புகளும் எதைக் காட்டுகின்றனவென்றால், தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைப்பதற்கு கட்சிகள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் என்பதைத்தான். எவ்வாறாயினும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் கொண்டுவரப்போகின்ற வேட்பாளர்கள் தொடர்பாகவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்தில் "மக்கள் நலன் விரும்பிகள் அவதானமாக இருப்பதாகவும் அறியப்படுகின்றுத. ஏனெனில் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற சில அர சியலை தமது சொந்த நலனுக்காகவும் வர்த்தக முயற்சிகளுக்காகவும் பயன்படுத்தி வருவதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.!

# "ஜஸ்டின் தனது தேசத்திற்காக முழுதான சேவையை வழங்கிய வண்ணம் இருந்தார்"

## அவரது துணைவியார் சோஃபி ட்ரூடோ புகழாரம் லிபரல் கட்சியின் புதிய தலைவரும் பிரதமருமான மார்க் கார்னியையும் வரவேற்று கருத்துக்களைப் பதிவிட்டார்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சோ∴பி கிராகோயர் ட்ரூடோ, அவரது முன்னாள் கணவர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட லிபரல் கட்சியினர் அவர்கள் ஆட்சியில் பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டதாக பெருமிதம் கொண்டனர்.
"இது மிகவும் உற்சாகமான பயணம், இல்லையா?", என்று சோ∴பி ட்ரூடோ பதிவிட்ட நிலையில் மேலும் . "நான் ஒரு எளிய பெண், ஒரு உத்தியோகபூர்வமற்ற முதல் பெண்மணி மற்றும் அம்மா மூன்று குழந்தைகளை வளர்க்கும் அனுபவத்தின் ஆழத்தை விவரிக்க வார்த்தைகளைக் கண்டுபிடிப்பேன், அவர்களின் அன்பான தந்தை ஜஸ்டின் தனது தேசத்திற்கான முழு சேவையில் இருந்தார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"ஒரு அத்தியாயம் முடிவடையும் போது, புதியது தொடங்குகிறது. எங்கள் நாட்டின் அனைத்து மூலைகளிலும் லிபரல் குழு சாதித்த கடின உழைப்பைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன், உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் செய்த தியாகங்களுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். அவர்கள் எதைக் கொண்டுள்ளனர் என்பது எனக்கு முதலில் தெரியும்."
சோ∴பி ட்ரூடோ தனது மகள் 16 வயதான எலா-கிரேஸையும் வாழ்த்தினார், வெளிச்செல்லும் பிரதமர் கனடாவின் தலைவராக தனது இறுதி உரையாக இருக்கக்கூடும் என்று லிபரல் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு முன்பு அவளது தந்தையை கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிமுகப்படுத்தியதற்காகவும் தனத மகளை வாழ்த்தினார்.

"எல்லா-கிரேஸ், உங்கள் அப்பாவை அறிமுகப்படுத்தும் போது நீங்கள் ஒரு திடமான மற்றும் அடித்தளமாக பேசினீர்கள்," என்று அவர் எழுதியுள்ளார். "உங்கள் கடுமையான மனம் மற்றும் மென்மையான இதயத்தைப் பற்றி உங்கள் தாயாக நானும் பெருமைப்படுகின்றேன்." என்றும் அவர் தெரிவித்தார்
மார்க் கார்னிக்கு ஒரு புதிய தலைமைத் தளபதி இருப்பதாகவும், அனைத்து லிபரல் எம்.பி.க்கள் தயாராக இருப்பதாகவும் கூறினார்
கனடாவின் மத்திய அரசை தலைமை தாங்கும் அ அரசியல்
மார்க் கார்னிக்கு ஒரு சவாலாக இருக்காது என்றும் சோ∴பி அவர்கள் வாழ்த்தியுள்ளார்.
, மேலும் முன்னாள் மத்திய வங்கியாளர் "எங்கள் உண்மைகள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதையின் வெளிச்சத்தை தொடர்ந்து பிரகாசிப்பார். வேலை வெகு தொலைவில் உள்ளது" என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது குடும்பத்தினரையும் "இவ்வளவு அன்பும் ஆதரவையும் வழங்கியதற்காக" எனது கனடிய சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் அனைவருக்கும் "நன்றி தெரிவிக்கும் வார்த்தைகளோடு சோ∴பி ட்ரூடோ அவர்கள் தனது பதவியை எழுதி முடித்தார்.
"சற்று தெரியும்" நான் முதலில் உன்னை நேசித்தேன்! அனைவருக்கும் சேவையில்."
சோ∴பி ட்ரூடோவும் அவரது கணவரான ஜஸ்ரின ட்ருடடோ அவர்களும் பிரிந்ததைத் தொடர்ந்து ஆண்டுகளில் ஒரு நட்பு உறவைப் பேணியதாகத் தோன்றியது, அவர்களின் மூன்று குழந்தைகளுடன் ஒரு "நெருங்கிய குடும்பமாக" இருக்க வேண்டும் என்ற தங்கள் சபதத்தை அவர்கள் நிறைவேற்றினர் என்றும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளார்கள்
தற்போது ஏற்பட்டுள்ள பிரிவு தொடர்பாக அண்மையில் இன்ஸ்ரகிராம் பதிவில் சோ∴பி ட்ரூடோ அவர்கள் தங்கள் பிரிவிற்கான நபர் யார் என்று குற்றம் சாட்ட அவர் மறுத்துவிட்டாள்: "நாங்கள் வெறுப்பு இல்லாமல், பிரிவு இல்லாமல், அவதூறு இல்லாமல் இந்த பிரச்சனையை தீர்க்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தங்கள் 18 வருட கால மண வாழ்க்கைக்கு பின்னர் பிரிந்து விட தாங்கள் தீர்மானித்ததாகவும் எனினும் தங்கள் பிள்ளைகளின் அட்டவணை தொடர்பாக தாங்கள் இருவரும் தினமும் உரையாடிய வண்ணம் அவர்களின் நலனைக் கவனித்து வருவதாகவும் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில் அண்மையில் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**Town House வாடகைக்கு உண்டு**

ஸ்காபுறோவில் **McLevin/Tapscott** சந்திப்புக்கு அருகில் உள்ள **Town House** உடனடியாக வாடகைக்கு உண்டு.
**2 Bed Rooms - 1.5 Wash Room, 1 Parking** ஆகியவை உண்டு.
**Shopping Mall** மற்றும் தமிழர் கடைகள் மிக அருகில்..
மேலதிக விபரங்களுக்கு 416-844-1447 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

**Basement For Rent**

**Markham/Steeles சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 2 Bedroom கொண்ட Basement உடனடியாக வாடகைக்குண்டு.
2 Bedroom Basement for rent from April 1st. Separate entrance. Separate washer/dryer/car parking. TTC Bus stop in front of house. Markham/steeles Scarborough.
416 728 2281**

**Room For Rent**

**Orton Park/Ellesmere சந்திப்பிற்கு அருகில் 1 Bedroom Basement அனைத்து வசதிகளுடன் வாடகைக்குண்டு.
Close to T.T.C , School.
Separate Entrance
ஆண்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
647-928 0667**

உலக செய்திகள்
World News

# மனுஜோதி ஆஸ்ரமத்தின் ஹிந்தி இசைத்தட்டு வெளியீடு



திருநெல்வேலி மனுஜோதி ஆசிரமத்தின் சார்பாக "ஓம்கார் ஸ்வரூப் ஸ்ரீ லஹரி கிருஷ்ணா அம்ரித் கீதாயன்" என்ற ஹிந்தி பாடல் வெளியீட்டு விழா ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. மேனாள் IASஅதிகாரி ஸ்ரீராம் திவாரி வெளியிட கலைத்துறையை சேர்ந்த முனைவர். அகிலா மிஸ்ரா முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். பாடகர் கஜல் ஸ்ரீனிவாஸ் இரண்டாம் பிரதியை பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் தொழிலதிபர்கள், அரசு அலுவலர்கள், மற்றும் பத்திரிகை நண்பர்கள், பின்னணி பாடகர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஸ்ரீ லஹரிகிருஷ்ணாவின் பக்தர்கள் பலர் விழாவில் பங்கேற்றுக் கொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் இடம் பெற்ற தொழில் சந்தை – வேலை வாய்ப்புக்காக காத்திருந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் பங்கேற்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (10-03-2025)







மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 11-03-2025 செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் காலை மாவட்ட தொழிற் சந்தை நடாத்தப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்டம் முழுவதும் இயங்கி வரும் தொழில் வழங்கும் நிறுவனங்களும் அதே நேரம் உயர்கல்வி வழங்கும் நிறுவனங்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் வேலை வாய்ப்புக்காக காத்திருந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்ட தொழில் சந்தைக்கு வருகை தந்த தொழில் வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தமது நிறுவனங்கள் ஊடாக எவ்வாறு தொழிலை பெற்றுக்கொள்ள முடியும்? அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தனர்.

அதே நேரம் உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களும் கலந்து கொண்டு தங்கள் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தியதுடன் விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மக்கள் சக்தி மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட நான்கு சபைகளுக்கும் கட்டுப்பணத்தை செலுத்தியது



- எஸ்.ஆர்.லெம்பேட் (11-03-2025)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) 12-03-2025 அன்றைய தினம் புதன் கிழமை மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

இளைஞர் மற்றும் விளையாட்டு விவகார அமைச்சின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் முஹமட் சாஜித் தலைமையில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

இதேவேளை பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அஷேக் சதீக் முப்தி முசலி பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ள அமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம்

## மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சாதனையாளர்கள் கௌரவிப்பு.

- எஸ்.ஆர்.லெம்பேட்



"நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு.

12-03-2025 அன்றைய தினம் புதன்கிழமை (12) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறிரங்க நாயகி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேசச் செயலாளர் திருமதி. கனகாம்பிகை சிவசம்பு கலந்து கொண்டதோடு,மாவட்டச் செயலக பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



இதன் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் விருந்தினர் களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, மன்னார் தோட்டவெளி கிராமத்தைச் சேர்ந்த மாணவி யேசுதாசன் யதுசிகா ஈட்டி எறிதல் போட்டியில் தேசிய ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டமையினால் அவருக்கு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "மன் ஆற்றல் வீராங்களை" என்னும் விருது மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும், கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறி ரங்கநாயகி கேதீஸ்வரன் அவர்களின் சேவையை பாராட்டி விசேடமாக கௌரவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் இரண்டு சபைகளில் சுயேட்சையாக போட்டியிட இளைஞர் குழு கட்டுப்பணத்தை செலுத்தியது



- எஸ்.ஆர்.லெம்பேட் (11-03-2025)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட இன்றையதினம் 11-03-2025 செவ்வாய்க்கிழமை இளைஞர் குழு ஒன்று மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தி உள்ளனர்.

நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.எம். சீலன் தலைமையிலான இளைஞர் குழு கட்டுப்பணத்தை செலுத்தி உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை மற்றும் நானாட்டான் பிரதேச சபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட கட்டுப்பணத்தை செலுத்தி உள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினம்!

**பு. கஜிந்தன்**

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் யாழ் மவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் 2025 ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் 9ம் திகதி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

“நிலையான எதிர்காலத்தை உருவாக்க அவள் வலுவான வழிகட்டியாக இருப்பாள்” என்னும் தொனிப்பொருளில் யாழ். பதில் மாவட்ட செயலர் மருதலிங்கம் இந்த நிகழ்வில் பிரதீபன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து சிறப்பித்திருந்தார்.



சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், வடக்கு மாகாண மகளிர் விவகார் அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ் மவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், மாவட்ட மகளிர் சம்மேளன பிரதிநிதிகள், பெண் முயற்சியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



குறித்த நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் யாழ் மாவட்டத்தை உள்ளடக்கிய 15 பிரதேச செயலகங்களின் பெண் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்படு சான்றிதளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி!




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 09-03-2025 அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவன ஈர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியானது பான்ட் இசையுடன் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து கிட்டுப்பூங்கா வரை நடைபவனியாக சென்றது.

பின்னர் கிட்டுப் பூங்காவில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு மகளிர் தினம் ஆரம்பமானது. இதன்போது மகளிர்களின் உரைகள் இடம்பெற்றன.

“பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்குக, பாலியல் குற்றங்களை துரிதமாக விசாரிக்க நடமாடும் நீதிமன்றங்களை உருவாக்குக, பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களை அரச புலனாய்வாளர்கள் பின் தொடர்வது, தொலைபேசியில் அழைப்பது, புகைப்படம் எடுப்பது, விசாரணை செய்வதை உடன்நிறுத்துக” என்ற வாசகங்கள் எழுதிய பதாகையை தாங்கிய வாகனமும் பேரணியில் ஈடுபட்டது.

அத்துடன், வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினால் இந்த பேரணியானது முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரக்கணக்கான மகளிர்கள் கலந்துகொண்டனர்.






# யாழ்ப்பாணத்தில் மன விரக்தியில் இளம் குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். இராகலை தோட்டத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் சந்திரபோஸ் (வயது 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் ஆவரங்கால் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ள நிலையில் விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

இந்நிலையில் இவர் கடந்த 9ஆம் திகதி கோப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்கு சென்று, அந்த வீட்டில் உள்ள ஆட்டு கொட்டகையில் தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார். இதனை அவதானித்த வீட்டில் உள்ளவர்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சடலத்தை மீட்ட பொலிஸார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைகளுக்காக கொண்டு சென்றனர். 10ம் திகதி அன்றையதினம் உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# விழாக் கோலம் பூணுகின்றது கச்சதீவு புனித அந்தோணியார் தேவாலயம்



## அந்தோணியாரின் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாட்டுப் பணிகளில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்

- ந.லோகதயாளன்

இலங்கை இந்திய எல்லையில் உள்ள கச்சதீவு புனித அந்தோணியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் மார்ச் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டுப் பணிகளிலேயே தற்போது நூற்றுக்கணக்கான இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் அனைவரது பார்வையில் விழாக் கோலம் பூணுகின்றது கச்சதீவு புனித அந்தோணியார் தேவாலயம் என்றே சொல்லவேண்டும் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

கச்சதீவு உற்சவத்தில் இலங்கை இந்திய யாத்திரிகர்கள் 9 ஆயிரம் பேர் பங்குபற்றவுள்ள நிலையில் இவர்களிற்கான தற்காலிக இறங்கு தளம், தங்ககம், பூசை மண்டபம் என்பவற்றுடன், உணவு ஏற்பாடு முதல் நீர் விநியோகம் வரையில் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவம், கூடு வலம் வருதலைத் தொடர்ந்து மறுநாள் காலை விசேட திருப்பலிப் பூசையுடன் கொடி இறக்கத்தைத் தொடர்ந்து பூசைகள் நிறைவு பெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு (Kachchatheevu) பெருந்திருவிழாவுக்கான ஏற்பாடு குறித்த கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிலையில் தற்பொழுது அங்கு விசேட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நெடுந்தீவு பிரதேச சபையின் ட்ரக்டர்கள் உட்பட கடற்படையினரின் வாகனங்களும் கப்பல்களும் இந்த ஏற்பாடுகளுக்காக பயன்படுததப்படுகின்றன.





# யாழ்ப்பாணத்தில் பெய்துவரும் மழையால் இரண்டு குடும்பங்கள் பாதிப்பு!



யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/409 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூன்று பேரும், ஜே/400 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இரண்டு பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு வீடு பகுதியளவிலும், ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# தேர்தல் போட்டியில் சமநிலை பேணப்படுவது அவசியம் என்கிறார் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் விக்ரர்!

ஒரு நாட்டில் அமைகின்ற அரசுகளே மக்களின் வாழ்க்கை முறையை தீர்மானிக்கின்றது. அனால் அந்த அரசையும் அரச-ியலையும் தீர்மனிபது மக்களாக இருக்கின்றனர் என சுட்டிக்காட்டிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CMEV) பணிப்பாளர் விக்ரர், தமக்கான அந்த அதியுயர் சக்தியை மக்கள் சரியாக பயன்படுத்தி வெற்றி கொள்வது மிக அரிதாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



தேர்தல் செலவீனங்களை முன்னிறுத்திய தேர்தல் பிரசாரங்கள் அதன் மதிப்பீடு செய்யப்பட செலவீனங்கள் தொடர்பில் கண்காணிப்பு தொடர்பிலான மாவட்ட மட்ட தேர்தலுடன் தொடர்புடையவர்களுடனான கலந்துரையடல் ஒன்று 09-03-2025 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அரியாலை சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சசீபன், யாழ் மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், அரசியல் கட்சிகள் சார் பிரதிநிதிகள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதன்போது இவ்வாறு தெரிவித்திருந்த அவர் மேலும் கூறுகையில் - தேர்தலின் முக்கிய பங்குதாரரான வாக்காளர்களுக்கும், தேர்தல் திணைக்களம், பொலிசார், கண்காணிப்பு அதிகாரிகள், இடையான தகவல் பரிமாற்றம் என்பது ஒவ்வொரு தேர்தலிலும் பலவகையான தாக்கங்களை செலுத்திவருகின்றன. இதை ஒரு முறையான பொறிமுறைக்குள் கொண்டுவருவது அவசியமாகும்.

மற்றும் தேர்தல்கால வன்முறைகளை இனங்காண்டு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கல். அவற்றை கட்டுப்படுத்தல், தேர்தல் செலவீனங்களை கையாளுதல் உள்ளிட்ட விடயங்களும் தற்போது பேசுபொருளாக இருக்கின்றது.

இதேநேரம் வரவுள்ள தேர்தல்களினல் சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகமானதாக இருக்கும் என்பது ஒரு பொதுக்கருத்தாக இருக்கின்றது. இந்த தாக்கம் தனி நபரையோ கட்சிகளையோ பாதிப்பதாக அமையுமானால் அதை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைக்கு எவ்வாறு செல்வது என்பதும் பலருக்கு கடினமானதொன்றாகவே இருக்கின்றது. அதனடிப்படையில் இதற்கான விழிப்புணர்வு மிக அவசியமாகும். அதையே இந்த கலந்துரையாடல் உறுதி செய்யுமென நினைக்கின்றேன்.

சட்டதிலுள்ள சிறு இடைவெளிளை பயன்படுத்தி போலி தகவல்களை பரப்புவோர் தப்பித்துக்கொள்ளும் நிலை இருப்பதனால் அத்தகைய தவறான செய்திகளை பரப்புபவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு பொலிசாரும் துறைசார் வல்லுநர்களும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

இதேநேரம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையமானது கடந்த 28 வருடங்களாக இலங்கையில் தனது செயற்பாட்டை முன்னெடுத்துவருகின்றது.

எமக்கு நாட்டிலுள்ள கட்சிகள் அனைத்தும் சமனானதே. தேர்தல் போட்டியில் சமநிலை பேணப்படுவதை உறுதி செய்வதை வலியுறுத்தவே நாம் எமது கண்காணிப்பு பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதுமட்டுமலல்லாது தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் வகிபாகம் அதிகரிப்பதை உறுதிசெய்யவும் அதற்கான விளிப்புணர்வுகளை ஒவ்வொரு மக்களுக்கும் சென்றடையும் வகையில் முன்னெடுத்தும் வருகின்றது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் உரிமைக் குரலான கமலினி செனிவிரத்னவிற்க்கு அவுஸ்திரேலியபிரிஷ்பேர்ணில் அஞ்சலி!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் மக்களின் துயரத்திற்காக அயராது பாடுபட்ட மனித உரிமை ஆர்வலரான டாக்டர் பிரையன் செனவிரத்னவின் மனைவி கமலினி ஒரு ஊக்கக் குரலாகவும் ஆதரவின் தூணாகவும் எப்போதும் இருந்தவர்.

அவுஸ்திரேலிய பிரிஸ்பேனில் தமிழ் சமூக ஆர்வலரான திருமதி. கமலினி செனவிரத்ன கடந்த மார்ச் 6, 2025 அன்று மறைவடைந்தார். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவரது அன்பான ஆதரவும், அவரது வசீகரமான குரல் அவரது தாராளமான விருந்தோம்பல் ஆகியவற்றை பிரி'பேர்ன் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

மிகக் குறிப்பாக இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்திற்கு அவர் காட்டிய உதவிகளை இங்கு வாழும் மக்கள் இலகுவில் மறந்து விட மாட்டார்கள்.

அவரது அசைக்க முடியாத நம்பிக்கையும், பெரும் சவால்களை எதிர்கொண்டாலும், அவர் எப்போதும் நெகிழ்ச்சியுடன் இருந்தவர். இருண்ட தருணங்களில் ஒளியைக் கண்டுபிடித்து, அனைவருக்கும் பலம் மிகுந்த ஊக்கத்தின் தூணாக தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை புரிந்து பணியாற்றினார்.

"சிங்கள கொட்டி" என சிறிலங்கா அரசால் பறைசாற்றப்பட்ட டாக்டர் பிரையன் செனவிரத்னவின் மனைவிக்கு பிரஷ்பேர்ண் தமிழ் சமூகம் தங்கள் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கை தமிழ் மக்களுக்கான மனித உரிமைகள் மற்றும் நீதிக்காக அயராது பாடுபட்ட டாக்டர் பிரையன் செனவிரத்னவுடன் அவரது மனைவி கமலினியும் இணைந்து பணியாற்றினார்.

கமலினி செனிவிரத்ன மண்ணிலிருந்து விடைபெறும் வேளையில், தமிழ் சமூகத்தின் குரலாக அவர் ஆற்றிய பணியைப் போற்றுவோம். அவர் இனி நம்முடன் இல்லாவிட்டாலும், அவரது ஆன்மா நம் இதயங்களில் என்றென்றும் வாழும் என்று பிரிஷ்பேர்ண் தமிழ் மக்கள் தங்கள் அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சட்டம் தொடர்பான கருத்துப் பகிர்வு!

பு. கஜிந்தன்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலம், யாழ்ப்பாணத்தில் “பெண்கள் உரிமைகளுக்கான விடயப் பரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட மாற்றம்” என்ற தொனிப் பொருளில் இந்த கருத்துப் பகிர்வு 11-03-2025 யாழ்ப்பாணபொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ்.இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப் பாளர் த.கனகராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை பீட தலைவர் சட்டத்தரணி திருமதி கோசலை மதன் கலந்துகொண்டு உரையாற்றினார்.







இங்கு பால் நிலை சமத்துவம், அரசியல் பிரதித்துவம், சமூகம் சமவாய்ப்பு, பெண்களுக்கு விஷேட, சட்டவாக்கம், குடும்ப வன்முறைச்சட்டம், தேசவழமச்சட்டம், பெண்களுக்கான, உள்ளூர் அதிகாரசபையில் பெண்களுக்கான வேண்டிய சட்டம், அடிப்படை சட்ட அறிவு, பெண்களுக்கான விஷேட சட்டம், தொழில் உரிமை, மகப்பேற்று காலச்சட்டம், அரசியல் அமைப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பிரச்சனைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் பிராதினி இன்பம், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# விடுதலைப் புலிகளின் தலைவரின் வீரச்சாவை அறிவித்தவர்கள் மீது பொன் சுதன் என்பவர் காட்டும் சீற்றம்!

## இது தொடர்பில் புலம்பெயர் தமிழர்களும் இலங்கை தமிழர்களும் அவதானமாக இருப்பதுடன் இவர்களை எமது தேசிய ரீதியான பயணத்தில் இருந்து அகற்ற வேண்டுமெனவும் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் வீரச்சாவை அறிவித்தவர்கள் மீது பொன் சுதன் சீற்றம் கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீரச்சாவை அறிவித்தவர்கள் இறுதி போரில் மக்களை சுட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பி ஓடியவர்களே என பொன் சுதன் தெரிவித்துள்ளார்.

11-03-2025 அன்று வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள சமூகமாற்றத்திற்கான ஊடக மையத்தில் வைத்தே மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட போரில் உயிரிழந்து விட்டதாக கூறி அவருக்கான வீரச்சாவு அறிவித்தலை புலம்பெயர் தேசத்தில் உள்ள அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது.

இத்தனை வருடங்களாக அமைதியாக இருந்த இவர்களை தற்போது யார் தூண்டி விட்டது?இவர்களுக்கு தலைவர் இருக்கிறாரா? இல்லையா? என அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன? இவர்கள் எல்லோரும் முன்னாள் போராளிகள் இல்லை. இவர்கள் கொண்ட கொள்கையை மறந்து இறுதி போரில் தாங்கள் தப்பிப்பதற்காக மக்களை சுட்டுவிட்டு சென்றவர்கள்.

தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஒன்று சேரும் போதெல்லாம் போலி அறிவிப்புக்களை வெளியிட்டு மக்களை திசை திருப்புகிறார்கள். இலக்கில் இருந்து அவர்களை அகற்றுகிறார்கள் இவர்கள் அனைவரும் இந்திய புலனாய்வுத்துறையான “றோ” அமைப்பின் நிகழ்ச்சி நிரலின் கீழ் இயங்குபவர்கள்.

இரண்டு அணிகளாக பிரிந்து போலி அறிவிப்புகளை செய்து மக்களை நம்பவைத்து பணம் சேர்க்கும் தந்திரத்தில் இதுபோன்ற புலம்பெயர் அமைப்புக்கள் சிலர் செயற்பட்டு வருகிறார்கள்.

ஒரு அணியினர் துவாரகா இருக்கிறார் என்றும் இன்னொரு தலைவர் பிரபாகரன் இல்லை என்றும் பிரச்சாரம் செய்து பணம் சேர்க்கிறார்கள். இந்த இரண்டு அணியினரும் ஒரே நிகழ்ச்சி நிரலின்கீழ் செயற்படுகிறவர்கள்.

முன்னாள் போராளிகள் என வெளி நாடுகளில் இருந்து இதுபோன்ற அறிக்கைகளை விடுபவர்கள் உண்மையான போராளிகள் இல்லை, உயிருக்கு பயந்து காக்க வேண்டிய மக்களை சுட்டுவிட்டு தப்பி ஓடியவர்கள். இவர்கள் தற்போது புலிகளின் பணத்தை சுருட்டியவர்களுடன் இணைந்து இவ்வாறான போலி அறிவிப்புக்களை விடுகின்றனர்.




இது தொடர்பில் புலம்பெயர் தமிழர்களும் இலங்கை தமிழர்களும் அவதானமாக இருப்பதுடன் இவர்களை எமது தேசிய ரீதியான பயணத்தில் இருந்து அகற்ற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

கனடிய செய்திகள்
Canadian News

# THE ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA RELEASES NAMES OF THE NEW BOARD 2025-2027

# கனடிய பல்லினப் பத்திரிகையாளர் கழகத்தின் 2025-2027 இயக்குனர் சபை விபரங்களை கழகம் வெளியிட்டுள்ளது

## கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மீண்டும் சிரேஸ்ட உப தலைவராகத் தெரிவு

கனடாவில் அதிகளவு பல்லினப் பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக் காட்சி மற்றும் வானொலி நிலையங்களின் இயக்குனர்கள் ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்ட நன்கு அறியப்பெற்ற ஊடகவியலாளர்கள் கழகமான கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் 2025-2027 காலப் பகுதிக்கான இயக்குனர் சபையின் பெயர் விபரங்கள் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று வெளியிடப்பெற்றுள்ளது.

கழகத்தின் தலைவராக டி கிறிக் மொழிப் பத்திரிகையாளரும் நீண்ட கால அனுபவம் கொண்டவருமான அவர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பெற்றுள்ளார்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மேற்படி கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் உறுப்பினராக தமிழ் மொழி சார்ந்து இயங்கிவருபவரான கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் மீண்டும் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளார்.

பல்வேறு மொழிப் பத்திரிகைகள் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் அங்கத்துவத்தைக் கொண்ட கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகம். கனடாவின் மத்திய மற்றும் மாகாண அரசுகளால் அங்கீகரிக்கப்பெற்ற ஒரு அமைப்பாக விளங்குகின்றது.

அதன் இயக்குனர் சபை பெயர் விபரங்கள் இங்கு காணப்படுகின்றன.

---

**THE NEW BOARD 2025-2027**

The New Board for the period of March 2025, to March 2027 will be:

Ex Officio Members of the Board:
- Mohammad Tajdolati, Ph.D. "Humanities and Social Sciences" Chair of the Board, Ombudsman, Chief Electoral Officer, Chair of the Awards Committee. Iranian
- Maria Voutsinas. Executive Director and Commissioner For taking Affidavits and administering the oath for the members of the NEPMCC.

Members of the Executive:
- Thomas S. Saras: President, CEO and Chairman of the Board. "Patrides, Hon. Joe Volpe Supplementary President Italian
- Susana Donan: Senior VP, Alternate President Latino
- Maria Voutsinas, Executive, Managing Director, Senior VP, Greek
- Kathy L. Lin Senior VP, Professional Development Chinese
- Hermie Garcia, Senior VP, Policy and Constitutional Affairs Philippine
- Neel Nanda, Comm. Senior VP, Secretary General Hindi
- Arif Ahmed, Senior VP, Treasurer. Bangladeshi
- Logan N. Longedralingam: Senior VP, Internal Corporis Affairs, Tamil
- Luba Cherny, Senior VP, Cultural & International Affairs Russian
- Ricky Castellvi :Senior VP, Public Relations, CNE etc. Pilipino
- Ahmed Shah Hotaki, Senior VP, Special Events Coordinator Afghani
- Ned Blair, Senior VP, Education/ Training/ New Membership. Caribbean
- Roberto Hausman VP, Senior Adviser to President Latino

VICE PRESIDENTS:
- Zuher Alshaaer, VP Free Press and Democracy Arabic
- Sandie De Freitas, VP. TV and Cinematography. Caribbean
- Paul Nguyen, VP, Social Media (New Trends). Vietnamese
- Phoebe Li, VP. Public Relations, Community Outreach Chinese
- Margaret Bonikowska, VP European Affairs Polish
- . Rajinder Saini, VP South Asian Affairs and Membership South Asia
- Mila A .Garcia VP, Humanitarian and Immigration Affairs Philippine
- Dimitris Vohaitis VP, Issues of Justice and Equality Greek
- Eugenia Bakchinow, Human Rights and Free Speech Russian
- Mulugeta Zergaber, VP, Photojournalism Eritrean
- Jennifer Zhu VP, Free Press and Equality. Chinese
- Nishantha Don, VP, Marketing and Promotion. Sri lankest
- Dumitru Popescu, VP Print-Membership, "Observatorul". Romanian
- Martha Pinzon, VP Events Organizer/ Magazine Brazilian
- Mohammad-Bagher Samimi, VP, Free Lance Journalists. Persian
- Mieczyslaw Kolosowski, European Affairs. Polish
- Emmanuel Ayiku VP, African Affairs "Ghanaian News". Ghanaian
- Teshome Woldeamanuel VP, Community Outreach. Ethiopian

AGENTS GENERAL:
Quebec
- The Hon. Basilio Giordano Chair Agent General for Quebec Italian
- Vahakn Karakachian, Co-Chair organizer Armenian

Manitoba:
- Helen Wang, Agent General, Chair "Manitoba Chinese Tribune" Chinese

Alberta:
- Phillip Lam Agent General, Chair "Vietnam Times Magazine" Vietnamese

British Columbia:
- Vinnie Combow, Senior VP, Chair of Provincial Council. South Asian
- William-Doyle Marshal, Board Member. Caribbean
- Maura De Freitas " Board Member". Irish

"The authority and powers of the Agent General are equal to those of a Senior Vice President. Each Agent General represents the Council in his Province and is responsible to organize the members of the local Ethnic Press and Media, in the area of his/her jurisdiction."

The NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA, is a not for profit, non-Governmental organization (NGO), representing 850 Canadian Publications, and another 150 Electronic Media, (TV and Radio). Our members are serving 101 linguistic and cultural communities.

FOR MORE INFORMATION:
The Head Office of the NEPMCC is located at:
The Press Gallery, # 212
Toronto City Hall
100 Queen Street West, Toronto ON. M5H 2N2

Our Mailing address is:
NATIONAL ETHNI PRESS AND MEDIA COUNCIL OF CANADA
P.O.BOX 266, DON MILLS POSTAL STATION
70 WYNFORD DR., TORONTO ON. M3C 2S2
Tel: (416) 921-8926 or (416) 921-4229
Fax: (416) 921-0723

Email: saras@nepmcc.ca and info@nationalethnicpress.com
Web Sites: www.nepmcc.ca www.nationalethnicpresscouncil.com

Thank you for visiting us.

# கண்டுகளிக்கத் தயாராகுங்கள்... கனடாவில் மேடையேறுகின்றது நாட்டுக் கூத்து – "இலங்கை வேந்தன்"

19-04-2025 அன்று சனிக்கிழமை கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "கிழக்கு ஒளி இணையம்" பெருமையுடன் வழங்கும் 15வது கலாச்சாரப் பெருவிழாவாம் "சித்திரை நிலா - 2025".

இந்த மேடையில் கண்டுகளிக்கத் தயாராகுங்கள். நாட்டுக் கூத்து - "இலங்கை வேந்தன்".

மேலதிக விபரங்களுக்கு: கலைஞர் மதிபாஸ்கரன் (647) 706-7289 அல்லது சஞ்சீவ் (647) 768-7108



# யாழ்ப்பாணம் பலகலைக் கழகத்தின் வேந்தராக முன்னாள் துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளையை நியமிக்குமாறு சீனத் தூதரகம் இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளது



中 华 人 民 共 和 国 大 使

FPO (Z) 018-2025

The Embassy of the People's Republic of China in the Democratic Socialist Republic of Sri Lanka presents its warmest compliments to Your Excellency and the Ministry of Education of Sri Lanka.

We take this opportunity to express our deep respect for the long-standing and cordial relations between the People's Republic of China and Sri Lanka, and in particular, our appreciation for the contribution of Sri Lankan scholars and academic institutions in fostering educational and cultural exchanges between our two nations.

In this context, the Embassy wishes to respectfully bring to Your Excellency's attention the distinguished academic and administrative contributions of Emeritus Professor P. Balasundarampillai, an eminent scholar and leader in the Northern Province of Sri Lanka. We understand that the position of Chancellor of the University of Jaffna is presently under consideration, and it is in this regard that we humbly submit our support for Professor Balasundarampillai's candidacy.

Emeritus Professor P. Balasundarampillai is a renowned academician and an intellectual of high repute, with an illustrious career spanning several decades. He served with distinction as the Vice Chancellor of the University of Jaffna from 1994 to 2000, a period during which he demonstrated exemplary leadership in the face of immense challenges, and was instrumental in ensuring the continuity of higher education and academic excellence in the region. His vision and commitment to education have made a profound impact on the development of the university and the advancement of knowledge in the Northern Province.

Beyond his academic leadership, Professor Balasundarampillai has been a tireless advocate for peace, reconciliation, and social harmony. His dedication to uplifting the educational standards in the Northern region, as well as his consistent efforts in fostering cooperation with international academic institutions, including those in the People's Republic of China, are deeply commendable.

In light of his vast experience, integrity, and unwavering commitment to the advancement of higher education in Sri Lanka, we believe that Emeritus Professor Balasundarampillai would be an ideal candidate for the position of Chancellor of the University of Jaffna. His appointment would not only bring immense prestige to the university but would also inspire future generations of scholars in the region.

The Embassy of the People's Republic of China respectfully requests Your Excellency to give favorable consideration to the appointment of Emeritus Professor P. Balasundarampillai as the Chancellor of the University of Jaffna.

Please accept, Your Excellency, the assurances of our highest consideration.

Colombo, 24th January 202

யாழ்ப்பாணம் பலகலைக் கழகத்தின் வேந்தராக முன்னாள் துணை வேந்தராக பணியாற்றிய பாலசுந்தரம்பிள்ளையை நியமிக்குமாறு சீனத் தூதரகம் இலங்கை ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சுக்கும் கடிதம் எழுதியுள்ளது என அறியப்படுகின்றது.

உள்ளூர் நிர்வாகத்தில் சீனத் தூதரகத்தின் நேரடி ஆதிக்கம் அதிகரித்திருப்பதன் வெளிப்பாடாக சீனத் தூதரகத்தின் கடிதம் அமைகின்றது.

.பல பதவிகளிற்கும் முக்கிய விடயங்களிலும் சீன தலையீடு செய வதாக கூறப்பட்டு வரும் நிலையில் ஓர் ஆவணம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கடிதத்தின் ஆங்கில மூலப் பிரதி இங்கு காணப்படுகின்றது.

இந்த விடயமானது அண்மைக்காலமாக சீனா இலங்கையின் பொது நிர்வாக மற்றும் உயர் கல்வி பீடங்களின் நிர்வாக விடயங்களில் தனது "மூக்கை" நுளைக்கின்றது என்பதற்கு நல்ல உதாரணமாக விளங்குகின்றது.


**Trinity Thaiyal**

Tailoring and Alteration Services

**Mary James: (647) 467-1410**

Located: Neilson and Sheppard

**நாம் வழங்கும் தையல் சேவைகள்:**

சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை, ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்

Instagram: @trinitythaiyal

**NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST**



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading, Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS

9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722

2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# அல்ஜசீராவில் பொறுப்புக்கூற மறுத்த ரணில்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**சி**ங்கள பௌத்த அரசுத் தலைவர்கள், அவர்கள் யுத்த வெற்றிவாதிகளாக இருந்தாலும் சரி, அல்லது லிபரல் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சமூக நீதி முகமூடி அல்லது மாற்றத்தின் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, எல்லாருமே தமிழ் மக்களுக்கோ அல்லது இறந்த காலத்துக்கோ பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பதைத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் அல் ஜஸீரா நிகழ்ச்சி உலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது.

முதலாவதாக அந்த நிகழ்ச்சி எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒரு நேர்காணல் என்பதை விடவும் குறுக்கு விசாரணையாகவே பெருமளவுக்கு அமைந்திருந்தது. மஹ்தி ஹசன் நன்கு வீட்டுவேலை செய்து கொண்டு வந்திருந்தார். விரல் நுனியில் தகவல்களை வைத்திருந்தார். புலம்பெயர்ந்த தமிழர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிந்திருந்தும் ரணில் அனாயாசமாகப் போய் மாட்டிக் கொண்டார். இனி எந்த ஒரு சிங்கள தலைவரும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன் ஒன்றுக்கு பல தடவை யோசித்து முடிவெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் நிகழ்ச்சி அது. புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் பலத்தை ஒரு விதத்தில் அது காட்டியது.

ரணிலைச் சுற்றி வளைக்கும் கேள்விகள். அவர் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மஹ்தி ஹசன் குறுக்கே பாய்ந்து கேள்விகளைக் கேட்கிறார். சில இடங்களில் ரணில் கூறும் பதில்களை பொருட்படுத்தாமலேயே கடந்து போகிறார். சில பதில்களுக்கு மறுத்தான்களை அனாயசமாக அள்ளி வீசுவிட்டு போனார். அந்த நிகழ்ச்சி முழுவதிலும் மஹ்தி ஹசன் ஒரு குறுக்கு விசாரணை செய்யும் அதிகாரியின் தோரணையிலேயே பெருமளவுக்கு நடந்து கொண்டார். அந்த நிகழ்ச்சிக்கு கிடைத்த கவர்ச்சியும் அதுதான். தமிழ்த் தரப்பு அதை கொண்டாடுவதற்கு பிரதான காரணங்களில் அதுவும் ஒன்று.

ஆனால் மஹ்தி ஹசன் எவ்வளவுதான் விட்டுக்கொடுப்பற்றவராகக் காணப்பட்டாலும் ரணில் உணர்ச்சிவசப்படவே இல்லை என்பதனை பலரும் கவனிக்கத் தவறுகிறார்கள். ரணில் வெகு "கூலாக" பதில் கூறுகிறார். அவருடைய சிறிய தொந்தியில் வழுகும் கழுத்துப்பட்டியை இடைக்கிடை சரி செய்து நேராக்கியபடி மிகவும் "கூலாக" அவர் பதில் கூறுகிறார்.

அவர் கூறும் பதில்களில் பல இக்கட்டுரையின் நோக்கு நிலையில், அதாவது தமிழ் நோக்கு நிலையில் மோசமானவை. ஆனால் ரணில் மிகவும் கூலாக சிரித்துக்கொண்டே பதில் சொல்லுகிறார். சிரித்துக் கொண்டே தன்னை காந்தியோடு ஒப்பிடுகிறார். சிரித்துக்கொண்டே இலங்கை ஒரு வன்முறை இல்லாத நாடு என்று கூறுகிறார். சிரித்துக்கொண்டே சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது என்று கூறுகிறார். அந்தப் பேட்டிக்குள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் அது. அணில் மிகவும் கூலாக இருந்தார்.

அதே சமயம் அவர் சொன்ன பதில்கள் பலவற்றிலிருந்து உலக சமூகமும் குறிப்பாக ஐநாவும் தமிழ் மக்களும் ஒரு தெளிவான செய்தியைப் பெறக்கூடியதாக இருந்தது. அது என்னவென்றால், சிங்கள பௌத்த அரசுத் தலைவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்புக் கூற மாட்டார்கள் என்பதுதான்.

2015 ஆம் ஆண்டு பொறுப்புக் கூறலுக்கான ஐநாவின் தீர்மானத்திற்கு இணையனுசரணை வழங்கியது ரணில் விக்ரமசிங்கதான். நிலைமாறு கால நீதிக்கான அந்த தீர்மானத்துக்கு ரணில் - மைத்திரி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. அதற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானங்களுக்கு எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரனை வழங்கவில்லை. மட்டுமல்ல, அந்த தீர்மானங்களுக்கு எதிராகவே காணப்பட்டன. ஆனால் ஒரே ஒரு தீர்மானம், அதுவும் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம்,அதற்கு இணை அனுசரணை வழங்கிய ஒரே ஒரு தலைவர், ஒரு பகிரங்க நிகழ்வில் வைத்துப் பொறுப்புக்கூறத் தயாரில்லை என்பதனை வெளிப்படுத்துகிறார். அப்படியென்றால் ஐநாவில் இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணைக்குப் பொருள் என்ன?

முன்னாள் ஐநா பொதுச் செயலர் பான் கி மூன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மகிந்த விசாரணைக் குழுக்களை உருவாக்கினார். ஆனால் அவை உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை. அல்லது அவை கண்டுபிடித்த அற்ப உண்மைகளையும் கூட மகிந்த ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ரணில் அதைவிட ஒரு படி மேலே சென்று ஒரு ஐநா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினார். அதுவும் இலங்கைத் தீவில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்கான அதாவது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். ஆனால் அவரும் அந்தத் தீர்மானத்துக்கு விசுவாசமாக இருக்கவில்லை. ஐநாவைப் பேய்க்காட்டுவதற்காகத்தான் அவர் அவ்வாறு இணை அனுசரனை வழங்கினார் என்பதைத்தான் அல்ஜஸீராவின் "ஹெட் ரூ ஹெட்" நிகழ்ச்சி வெளிப்படுத்தியது.

ஆனால் அது அதற்காக அவர் வெட்கப்படவில்லை. மிகவும் கூலாக, சிரித்துக்கொண்டு அதைச் செய்தார் என்பதுதான் இங்குள்ள பயங்கரமாகும். ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின் போது சிங்கள மக்கள் சித்திரவதை செய்யப்பட்ட, கொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் சரி, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இன அழிப்புக் குற்றச்சாட்டுகளுக்கும் சரி, ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கும் சரி, அவர் பொறுப்புக் கூறத் தயாராக இருக்கவில்லை. பொறுப்பற்ற தனமாக கூலாகப் பதில் சொன்னார்.

இலங்கைத் தீவின் வரலாற்றில் ஒரு முன்னாள் அரசத் தலைவர் அதுபோல எங்கேயும் அவமானப்படுத்தப்பட்டதாக எனக்கு நினைவில்லை. "உன்னுடைய வயதை விட என்னுடைய அரசியல் வாழ்வின் காலம் அதிகமானது" என்று ரணில் சிரித்துக் கொண்டு செல்லலாம். ஆனால் அவ்வளவு அனுபவசாலியான அவர் அதுபோல வேறு எங்கேயும் அவமானப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் தமிழ் மக்களை அதிகம் சந்தோஷப்படுத்திய விடயம்.

அதாவது சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பை அம்பலப்படுத்திய ஆகப் பிந்திய நிகழ்ச்சி அது. சிங்கள பௌத்த அரசு தலைவர்கள் தமிழ் மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் முஸ்லிம்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் மட்டுமல்ல சிங்கள கத்தோலிக்கர்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் என்பது அங்கே தெளிவாகத் தெரிந்தது. அண்மை காலங்களில், தையிட்டி விகாரை விவகாரத்துக்கு அடுத்ததாக, சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு பொறுப்புக் கூறாது என்று தமிழ் மக்கள் நம்பத் தேவையான விடயங்களை அதிகமாக வெளிப்படுத்திய ஒரு நேர்காணல் அது.

எல்லாக் குற்றங்களையும் செய்துவிட்டு அல்லது குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டு கூலாக அவர் சொன்ன பதில்கள் யாவும், இன அழிப்புச் செய்தவர்களையும் தமது அரசியல் வெற்றிகளுக்காக முஸ்லிம் மக்களை பலியிட்டவர்களையும் அவர் பாதுகாக்கிறார் என்று நம்பப் போதுமானவைகளாக இருந்தன. அதாவது குற்றங்களைப் பாதுகாக்கும் குற்ற மயப்பட்ட ஒரு அரசுக் கட்டமைப்புக்கு அவர் தலைவராக இருந்திருக்கிறார் என்பதை அவர் வெளிப்படுத்தினாரா?

மகா சங்கத்துக்கு விசுவாசமாக அவர் கூறிய பதிலில் தன்னை ஒரு சிங்கள பௌத்தனாகப் பிரகடனப்படுத்துகிறார். அங்கே அவருடைய லிபரல் முகமூடி பாரதூரமாகக் கிழிகிறது. ஆனால் அவர் கூலாகப் பதில் கூறுகிறார்.

ஆனால் இதில் தமிழ் மக்களுக்குப் புதிதாக எதுவும் இல்லை. ஏனென்றால் ரணிலைப் பற்றி ஏற்கனவே பெரும்பாலான தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பலமான ஒரு படிமம் உண்டு. அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்ததை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டுவது அந்த அடிப்படையில்தான். எனவே ரணில் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால் ரணிலோடு இணைந்து நல்லாட்சிக் காலகட்டத்தில் அதாவது 2015 இல் இருந்து 2018 வரையிலுமான காலப்பகுதியில், நிலைமாறு கால நீதிக்காக உழைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அவர்கள் ரணிலை மட்டும் பாதுகாக்கவில்லை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்தையும் பாதுகாத்தார்கள். சஜித்தும் ரணிலைப்போலதான்.

கடந்த செப்டம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில்தான் ஐநா கூட்டத் தொடரும் நடந்தது. அப்பொழுது சஜித், ஐநா தீர்மானங்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத்தான் கொண்டிருந்தார்.ரணில் மட்டுமல்ல சஜித்தும் பொறுப்புக்கூறத் தயார் இல்லை. அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தமிழ் வாக்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில், ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. அக்காலகட்டத்தில்தான் சஜித் பொறுப்புக்கூறல் தொடர்பில் பன்னாட்டுப் பொறிமுறைகளுக்கு எதிராகத் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இது நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடந்த, பொது வேட்பாளருக்கான கடைசிப் பிரச்சார கூட்டத்தில், மேடையில் வைத்துப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளை சுமந்திரன் சஜித்துக்கு வாங்கி கொடுத்தார். தேசத் திரட்சிக்காக, பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரிய நேத்திரனை சுமந்திரனுக்கு விசுவாசமான மத்திய குழு கட்சியை விட்டு நீக்கியிருக்கிறது. அதாவது சிங்களத் தலைவர்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயார் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை அவர்களுக்குத் திருப்பும் தமிழ் தலைவர்களும் தமிழ் மக்களுக்குப் பொறுப்பு கூறத் தயாரில்லை.

---

**வீணாவின் கவிக்கணை**

யாரோ தெரியாதவர்
அறியாமல் செய்யும்
சில பிழைகளை
மன்னித்துவிடலாம்,
ஆனால்
நம்மைப்பற்றி
நன்கு அறிந்தும்
நம் நிலமை புரிந்தும்
நம்மை
காயப்படுத்தும்
சிலரை
நம்மால் ஒன்றுமே
செய்ய முடிவதில்லை!

# 1987–1989 காலப் பகுதியில் இலங்கையில் ஜனாதிபதியாக பிரேமதாசவும் பிரதமராக ரணிலும் ஆட்சி செய்தபோது தெற்கில் அரங்கேறிய அரச பயங்கரவாதம்

**1987-1989 காலப் பகுதியில் இலங்கையின் ஜனாதிபதியாக பிரேமதாசவும் பிரதமராக ரணில் என்னும் நரியும் ஆட்சி செய்தபோது தெற்கில் அரங்கேறிய அரச பயங்கரவாதமும் அப்பாவிகளை குறி வைத்து கொலை செய்தமையும் தொடர்பான கேள்வி-பதில் வடிவிலான விபரக் கொத்தை நாம் இங்கு பிரசுரிக்கின்றோம். எவ்வாறு 1980 தொடக்கம் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் இளைஞர்களை தேடித் தேடி கொலைகளை ஜேஆர் சந்திரிகா மற்றும் பிரேமதாச ஆகியோர் செய்தார்களோ. அதுபோன்ற காட்சிகளே இந்தப் விபரக் கொத்தை வாசகர்கள் படிக்கும் போது உணர்ந்து உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். - பிரதம ஆசிரியர்**

------------------------------------------------------------




**1987** தொடக்கம் 1989 வரை ஆயிரக்கணக்கான JVP இளைஞர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட "படலந்தை" வதை முகாமில் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக இருந்த ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் ஏ.பீ. கருணாரத்ரன அவர்கள் ஒரு நேர்காணலில் வழங்கிய திரள் வாக்குமூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு ஒரு விபரக் கொத்து வடிவில் கீழே பிரசுரமாகின்றது. ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் ஏ.பீ. கருணாரத்ரன அவர்களின் படமும் இங்கு இணைக்கப்பெற்றுள்ளது.

- ஊடகவியலாளர்: இந்த வாக்குமூலத்தை நீங்கள் வழங்குவதால் உங்களுக்கு ஏதாவது உயிராபத்து ஏற்படும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

- ஏ.பீ கருணாரத்ரன: "இந்த நேர்காணலிற்கு போக வேண்டாம்! என்று பலர் என்னை அச்சுறுத்தினார்கள். நான் யாருக்கும் கடனுமில்லை. பயமும் இல்லை. எனக்கு இப்போது 88 வயது. என்னை இன்று கொலை செய்தாலும் பராவாயில்லை. நாளை கொலை செய்தாலும் பராவாயில்லை. நாங்கள் வாழ்ந்த காலம் முடிந்து விட்டது.



- ஊடகவியலாளர்: நீங்கள் யார்? உங்கள் பதவி என்ன?

- ஏ.பீ கருணாரத்ரன: ஏ.பீ. கருணாரத்ரன, ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர். இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அவர்களின் ஆலோசனைக்கு அமைய "படலந்தவில்" ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றேன்.

- ஊடகவியலாளர்: "படலந்த" என்றால் என்ன?

- ஏ.பீ கருணாரத்ரன: "படலந்த" என்பது காடு அல்ல. கொழும்பிலிருந்து கிரிபத்கொடவிற்கு செல்லும் போது, கிரிபத்கொடயில் இருந்து மாத்தறை வீதிக்கு செல்லும் போது கொஞ்சம் தூரம் சென்ற பின் வலது பக்கம் சுமார் 20 ஏக்கர் அளவிலான தென்னந்தோப்பு ஒன்று இருக்கும். அதில் வேலை செய்யும் வேலையாட்களுக்கான களஞ்சிய அறைகள் உட்பட பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அதே 20 ஏக்கரில் பெரும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த கட்டிடங்களில் தான் வதை முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன.

- ஊடகவியலாளர்: "படலந்தவில்" என்ன நடந்தது?

- ஏ.பீ கருணாரத்ரன: படலந்தவிற்கு (JVP உறுப்பினர் / ஆதரவாளர் என சந்தேகிக்கப்படும்) ஒருவரை கொண்டுவந்தால் முதலில் அவர்களைத் தலைகீழாகத் தொங்கவிடுவார்கள். அதன்பிறகு அவர்களின் இரு காதுகளிற்கு பெரிய இரும்பு ஆணி அடிக்கப்படும். கண்களிற்கு தையல் ஊசியால் குத்துவார்கள். கண்ணாடித் துண்டுகளை சாப்பிடக் கொடுப்பார்கள். சாப்பிடாவிட்டால் பலமாக அடித்து சாப்பிட வைப்பார்கள். சாப்பிடும் போதே அந்த கண்ணாடி துண்டுகள் உடல் பாகங்களை கிழித்துக் கொண்டு வெளியே வரும். சூடாக்கப்பட்ட இரும்புக் கோலினால் முதுகில் சூடு வைப்பார்கள்.

இவற்றை செய்யும் போதே அந்த மனிதர் அரைவாசி இறந்த விடுவார். பின்னர் கீழே இறக்கி பொலித்தீன் உறைகளில் போடுவார்கள். பின்னர் விசாலமாக வெட்டப்பட்டுள்ள குழிகளில் அவர்களை போட்டு அவர்களுக்கு மேல் டயர்களை போட்டு கொளுத்துவார்கள். இங்கே இடம் போதாத சந்தர்ப்பங்களில் சிலரை "மட்டக்குளியில்" உள்ள குப்பை சேகரிக்கும் இடத்திற்கு கொண்டு சென்று அங்கே ரொட்டி போடும் தட்டு போல் ஒரு பெரிய தட்டு இருந்தது. அதில் போட்டு கொளுத்து வார்கள்.

- ஊடகவியலாளர்: அவ்வாறு கொலை செய்யப் பட்டவர்களுள் யாராவது விஷேடமானவர்கள் இருந்தனரா?

- ஏ.பீ கருணாரத்ரன: "விஜயதாஸ லியனாரச்சி" இவர் அக்காலத்தில் திறமைமிக்க ஒரு சட்டத்தரணி. பெரும்பாலான காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைப் பற்றியே இவர் நீதிமன்றங்களில் வாதிட்டார்.

- ஊடகவியலாளர்: அவருக்கு என்ன நடந்தது?

- ஏ.பீ. கருணாரத்ரன: இவர் ஒருநாள் ஒரு வழக்கிற்காக வாதிட்டுவிட்டு வெளியே வரும் போது சிவில் ஆடை அணிந்த 4 பொலிஸ் அதிகாரிகள் வந்து வழக்கொன்றிற்காக வாதாட வேண்டி உள்ளதாக கூறி வெள்ளை வேன் ஒன்றில் ஏற்றி "தங்காலை" பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே கரவிட்ட என்ற ஏ.எஸ்.பீ. (Additional Superintendent of Police) ஒருவர் இருந்தார். அவர் பல கேள்விகளை இவரிடம் கேட்டார். இவர் எதற்கும் பதில் கொடுக்காமல் மௌனமாக இருந்தார். பின் அவரை பலமுறை அடித்து கேள்விகளை கேட்டார். எதற்கும் இவர் பதில் அளிக்காததால் "படலந்தவிற்கு" அழைத்து வரப்பட்டார்.



அங்கு கொண்டு வரும் போதே அவர் அரைவாசி இறந்த நிலையிலேயே இருந்தார். அங்கு கொண்டுவரப்பட்ட உடன் டக்ளஸ் பீரிஸ் என்ற அதிகாரி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவிற்கு செய்தி அனுப்பினார்.

உடனே ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும், ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே வாகனத்தில் அங்கு வந்தனர். அவர்களும் முடியுமான அளவு கேள்விகளை கேட்டனர். ஆனால் அந்த சட்டத்தரணி எதற்கும் பதில் கொடுக்காமல் மௌ-னமாகவே இருந்தார். அவருக்கு பதில் கொடுக்கும் அளவிற்கு கூட உயிர் இருக்கவில்லை. அதன் பின்னர் இருவரும் டக்ளஸ் பீரிஸிடம் இந்த சட்டத்தரணியை முடியுமான அளவு சித்திரவதை செய்து கொலை செய்யுமாறு பணித்தனர்.

அதன் பின்னர் அந்த சட்டத்தரணியின் இரு கண்களும் பிடுங்கப்பட்டு மிளகாய்த் தூளை முகத்தில் போட்டனர். நான் ஆயுத களஞ்சியசாலையில் இருந்து மிகவும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் முடியுமான அளவு சித்திரவதை செய்தனர். மாலை 5 அல்லது 6 மணியளவில் அவர் உயிர் அவரது உடலை விட்டு சென்றது. அன்று இரவே பெரிய வைத்தியசாலைக்கு அருகில் அவரின் உடலை போட்டுவிட்டு வந்தனர். காலையில் சடலத்தை கண்ட மக்கள் வைத்தியசாலையின் பிணவறையில் கொண்டு சென்று வைத்தனர். பிணவறையில் அவர் உடல் வெட்டப்பட்டு மரண பரிசோதனை செய்யப்பட்டு 46 உட்காயங்கள் காரணமாக இரத்தம் அதிகமாக வெளியேறி உயிரிழந்ததாகக் கூறினர். பின்னர் அவரின் அண்ணாவை அழைத்து அவரது சடலம் கையளிக்கப்பட்டது. அவரது கண்கள் இருந்த இடத்தில் ஏதோ ஒன்றை நிரப்பியிருந்தனர்.

- ஊடகவியலாளர்: கண்களால் கண்ட உங்களால் மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது உள்ளதா?

- ஏ.பீ கருணாரத்ரன: ஆம். களுத்துறை பிரதேசத்தில் நடந்த சம்பவம். தென் மாகாணத்திற்கு பொறுப்பாக "விஜய சூரிய" என்ற ஒரு இராணுவ கேப்டன் இருந்தார். அவரின் அம்மாவின் வீடு "வேயங்கொட" பாடசாலைக்கு அடுத்த காணியில் இருந்தது. JVP யினர் சிலர் வந்து அவரின் அம்மாவின் தேசிய அடையாள அட்டையையும், பணத்தையும் எடுத்துச் சென்றனர். அவரது மகனை உடனடியாக இராணுவத்தில் இருந்து வெளியேறுமாறும் கூறிவிட்டு சென்றனர். மகன் வந்தவுடன் அம்மா நடந்ததை கூறியதும் கோபமடைந்த கேப்டன் விஜயசூரிய லொறி ஒன்றை எடுத்துச் சென்று களுத்துறை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்த உயர்தர வகுப்பிற்கு டியூ'ன் சென்று அங்கு கற்றுக் கொண்டிருந்த மாணவிகள் உட்பட 20 பேரை படலந்தவிற்கு அழைத்துக் கொண்டு வந்து மாணவிகள் அனைவரையும் துஷ்பிரயோகம் செய்து ஆண் மாணவர்களை படுக்க வைத்து இரும்பு சுத்தியலால் தலையில் பலமுறை அடித்து பின்னர் பொலித்தீன் உறைகளில் அவர்களது உடல்களை போட்டுக் கொண்டு அந்த கேப்டனின் அம்மாவின் வீட்டுக்கு அருகில் பாடசாலைக்கு முன்பாக அவர்கள் உடல்கள் மீது டயர்களை இட்டு கொளுத்தினர். அவர்களை முதலில் டியூசன் வகுப்பில் இருந்து கொண்டு வரும் போது அனைவரும் பயத்தினால் கதறி அழுதனர். சிலர் "எங்கள் அம்மாவை ஒரு முறை எங்களுக்குக் காண்பித்து விட்டு எங்களைக் கொலை செய்யுங்கள்! என்று கெஞ்சினர்.

- ஊடகவியலாளர்: இது போன்ற சித்திரவதைகள் "படலந்தவில்" மாத்திரமா மேற்கொள்ளப்பட்டன?

- ஏ.பீ கருணாரத்ரன: படலந்தவிற்கு பெரும்பாலும் கொண்டுவரப்பட்டவர்கள் பிற இடங்களில் வசித்தவர்கள். ஹபராதுவை வரை, அம்பலங்கொட, பலப்பிட்டிய, வேயங்கொட, மீரிகம, திஹாரிய மற்றும் அத்தனகல்ல பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் தான் படலந்தையில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

படலந்த போன்ற வதைக்கூடங்கள் சுமார் 46 நாடு முழுவதும் காணப்பட்டன. அவைகள் அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைக்கப்பட்ட தொழிற் கிராமங்கள் ஆகும். சூரியகந்த, வவுல்பெலே, மினுவங்கொட, பலங்கொட உடவலை மற்றும் மல்மீகன்த என்பன சில உதாரணங்களாகும்.

- ஊடகவியலாளர்: படலந்தவிற்கு அடிக்கடி வந்து சென்றவர்கள் யார்?

- ஏ.பீ கருணாரத்ரன: தினமும் ரணில் விக்கிரமசிங்க வந்து செல்வார். அதேபோன்று கோணவில சுனில். கோணவில சுனில் வைத்தியர் ஒருவரின் மகளை கற்பழித்து கொலை செய்து சிறைவாசம் அனுபவித்துக் கொண்டு இருக்கும் போது ரணில் விக்கிரமசிங்கவினால் விடுதலை செய்யப்பட்டு சமாதான நீதிவானாக மற்றும் இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சில் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

- ஊடகவியலாளர்: பிரபல்யமான தேச-ிய அடையாள அட்டையை பறித்துக் கொண்டு செல்லுதல் தொடர்பான உங்கள் கருத்து என்ன?

- ஏ.பீ கருணாரத்ரன: உண்மை. "கோணிபில்லா" என்ற ஒரு குழுதான் இதனைச் செய்தது. அதில் பெரும்பாலானோர் JVP இல் இருந்தவர்கள் தான் தேசிய அடையாள அட்டைகளை எடுத்து சென்றனர். கட்சிக்கு உதவுவதாக கூறி பணத்தை கொள்ளை அடித்தனர். JVP இனர் 3 கோணிப் பைகளில் (உரப்பை) தேசிய அடையாள அட்டைகளை எடுத்து வைத்திருந்தனர்.




(தொடர்ச்சி 19 பக்கம்)

VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






**"உங்கள் உரிமைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?"**



>>> preventionlink.ca

**எங்கள் தகவல் வழிகாட்டிகளை தமிழில் இலவசமாகப் நீங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.**

தொழிலாளர்களின் இழப்பீடு, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு தரநிலைகள் மற்றும் பணியிடத்தில் மனித உரிமைகள் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

www.preventionlink.ca/services/the-lighthouse-initiative



ஒன்ராறியோவின் பணியாளர் குழுவிற்கு புதியவரர்கள் அல்லது எந்தவொரு துறையிலும் நீண்டகாலமாகப் பணிபுரிபவர்கள்:

>>> பணியிடத்தில் தங்கள் உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்துகொள்ள அனைவரும் தகுதியானவர்கள்.

>>> உங்கள் பணியிடத்தில் பாதுகாப்பான சூழலுக்கு அனைவரும் உரித்தானவர்கள்.



LIGHTHOUSE INITIATIVE
>>> PREVENTION LINK

PREVENTION LINK DISABILITY PREVENTION AT WORK

ONTARIO FEDERATION OF LABOUR

# கனடாவிலிருந்து உலகத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் மூத்த கனடா வாழ் ஊடகர்கள் இருவருக்கு புதிய குரலின் வாழ்நாள் சாதனையாளர் விருது 2025

புதிய குரல் பத்திரிகையின் கனேடிய பதிப்பின் முதலாவது ஆண்டு விழா எதிர்வரும் 2025 மார்ச் 16ம் திகதி மாலை 4.30 க்கு ரொறன்ரோவில் உள்ள டேஸ்ட் ஒப் கொழும்பு (**TASTE OF COLOMBO**) கூட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய குரல் பத்திரிகை பப்ளிகேசன்ஸ் நிறுவுனர் கலாநிதி பஹத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் , பிரதம அதிதியாக கனேடிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி கலந்து கொள்ளவுள்ளார்., விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சல்மா சாஹிட், சென்சௌன், மாகாண சபை உறுப்பினர்களான விஜய் தணிகாசலம், அன்ரியா ஹெசல், லோகன கணபதி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

ஈழத்திலிலிருந்து புலம்பெயர்ந்து பல ஊடகர்கள் கனேடிய தேசத்திற்கு வந்திருந்தாலும் அதில் சிலரே தொடர்ந்தும் சார்ந்த மக்களுக்கு ஊடகப்பணி செய்து கொண்டு வருகிறார்கள்., ஆனால் தனியான ஊடகத்தை உருவாக்கி அதன் மூலம் மனித உரிமை, நீதிக்காக குரல் கொடுக்கும் முக்கிய தேசத்தின் அன்பாளர்களாக உள்ள உதயன் பத்திரிகை ஸ்தாபகர் ஆர். என். லோகேந்திரலிங்கம் (மலையன்பன்), யுகம் ஊடக வலயமைப்பின் ஸ்தாபகர் “கலைவேந்தன்“ கணபதி ரவீந்திரன் ஆகியோர் பல்வேறு ரீதியில் பணிகளை செய்து வருகிறார்கள்.

புதிய குரல் 2018 முதல் வருடாந்தம் இருவருக்கு வாழ்நாள் ஊடக விருதுகளை வழங்கி வருகிறது, ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள முக்கியமான ஊடகர்கள் கடந்தகாலங்களில் இவ்விருதினை தங்கள் வசமாக்கி கொண்டுள்ளனர்.

இலங்கையில் மறுக்கப்பட்ட நீதி, இழைக்கபட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து அதிகம் பேசும் புதிய குரல் முதலாவது ஆண்டினை கனேடிய மண்ணில் நிறைவு செய்துள்ளது. இதற்கு பங்காளர்களாக இருந்த அனைவருக்கும் ஆசிரியர் பீடம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
**15-03-1938**

மறைவு:
**16-03-2023**

# திரு. வைரமுத்து விநாயகமூர்த்தி

**(கோண்டாவில் கிழக்கு மற்றும் நவக்கிரி)**

எங்கள் குடும்பத்தின் ஒரு பேராண்மையை இழந்து
நாம் ஈராண்டைக் கடக்கின்றோம். இத்தனை நாட்களும்
பொங்கி வரும் ஏக்கத்துடன் அமைதியாய் நினைத்திருந்தோம்
போற்றி அவர் முகத்தை அனைவருமே இதயத்தில் வைத்திருந்தோம்
இனி வரும் காலங்களும் அப்படித்தான் ஐயா!

நீங்கள் எமக்காய் வாழ்ந்தவர் எமக்காய் உழைத்தவர்
எமக்காய் ஆலயம் சென்று வழிபட்டவர்
எமக்காய் வியர்வை சிந்தி விதைகளை நாட்டியவர்
எமக்காகவே அனைத்தையும் செய்ய உடலை வருத்தியவர்
அப்படியாயின் நாம் எப்படி ஐயா தங்களை மறப்போம்?

உங்கள் புதல்வன் தன் உ யிரை தாயக மண்ணுக்காய் ஈந்தபோது
அவனுடலை புதைத்து விட்டு
துயிலும் இல்லத்திலிருந்து வாழும் இல்லம் நோக்கி
தலை நிமிர்ந்து திரும்பியவர் நீங்கள்
உங்கள் கண்களில் நாம் கண்ணீரைக் காணவில்லை
பல கனவுகளின் அதிர்வுகளை தங்கள் முகத்தில் கண்டோம்

உங்கள் பூவுலகப் பிறப்பு எமக்கு கிடைத்த வரம் ஐயா
வாழ்க்கைத் துணைவராகவும் தந்தையாகவும் இன்னும் பலவாகவும் உறவுகளைத் தாங்கி
எங்கள் அனைவரையும் தாங்கிக் கொண்டவர் தாங்கள் என்பதை ஊரறியும்
தங்கள் இழப்பு ஒரு மரணம் அல்ல எமக்கு ஐயா
அது ஒரு உதாரணமாய் எம் வாழ்க்கைக்கு உதவிநிற்கும்
என்றே நாம் இறுதி வரை நம்பி வாழ்வோம்!

எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் இனியவரே
எப்போதும் போலவே எம்மோடு இருங்கள்

**இங்ஙனம்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு: (416) 888-1128, (647) 885-3012, (905) 205-1070**

# தமிழ் மக்கள் கட்சிகளை நம்பாது புதியவர்களை ஆதரிக்க வேண்டும் என்கிறார் பருத்தித்துறை சுயேட்சை குழு தலைவர் முல்லைதிவ்யன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

## சுயேட்சையாக களமிறங்கும் எமது குழுவில் தோட்ட வேலை செய்பவர்கள், ஏழை மீனவர்கள், கழிவு அகற்றும் தொழிலாளர்கள் உட்பட பல புத்திஜீவிகள் வேட்பாளராக களம் காணவுள்ளனர்




சுபீட்சமான ஒரு பிரதேசத்தை உருவாக்க உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் தமது சுயேட்சை குழுக்கு வாக்களிக்க வேண்டுமென பருத்தித்துறை பிரதேச சபையில் சுயேட்சை குழுவாக போட்டியிடும் அதன் தலைவர் முல்லைதிவ்யன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள சமூகமாற்றத்திற்கான ஊடக மையத்தில் வைத்தே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில், எங்களுடைய மண், மக்கள் நலனை பிரதான இலக்காக கொண்டு நாம் வரித்துக் கொண்ட தமிழ் தேசிய பற்றோடு பிரதேச அபிவிருத்தியை பிரதான இலக்காக கொண்டு நாங்கள் உள்ளூராட்சி சபை தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுகின்றோம்.

சுயேட்சையாக களமிறங்கும் எமது குழுவில் தோட்ட வேலை செய்பவர்கள், ஏழை மீனவர்கள், கழிவு அகற்றும் தொழிலாளர்கள் உட்பட பல புத்திஜீவிகள் வேட்பாளராக களம் காணவுள்ளனர்.

கட்சிகள் தங்களுடைய சுய இலாபத்திற்காக வேட்பாளர்களை நிறுத்தி அதனூடாக வாக்குகளை அபகரித்து தங்களுக்கான சுய இலாபத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள் என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் சுயேட்சையாக போட்டியிடுவதன் ஊடாக எங்களுக்கு கிடைக்கின்ற ஆசனங்களை பயன்படுத்தி சுதந்திரமான தீர்மானங்களை நாமே எடுத்து எங்களுடைய பிரதேசங்களையும், வட்டாரங்களையும் சிறப்பாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.

மக்கள் தூரநோக்கோடு சிந்திக்க வேண்டும். இன்று கட்சிகள் பலவாறாக சிதறுண்டு போயுள்ளன. ஆகவே இந்த கட்சிகளின் அரசியலுக்கு அப்பால் நாங்கள் சுயேட்சையாக போட்டியிடுவதற்கான பிரதானமான காரணம் கட்சிகளின் மேல் கொண்ட அதிருப்தியும்,மக்கள் மீதும் கொண்ட பற்றும்தான் நாங்கள் இன்று சுயேட்சை குழுவாக போட்டியிடுகின்றோம்.

ஆகவே எமது சுயேட்சை குழுவை நீங்கள் ஆதரித்து எமது மக்களுக்கான தேவைப்பாட்டை, அடிப்படை வசதிகளை பிரதேச அபிவிருத்தியை செய்வதற்கு எமது சுயேட்சை குழுவிற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

கட்சிகளின் ஏமாற்று வேலையை நம்பாது எமக்கு நீங்கள் வாக்களிப்பதன் மூலம் நிச்சயமாக, திடமாக, உறுதிப்பாடான, புதிய மறுமலர்ச்சி நோக்கிய சுபீட்சமான ஒரு பிரதேசத்தை எங்களால் நிச்சயமாக ஏற்படுத்த முடியுமென தெரிவித்தார்.

# "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது?"

## மகளிர் தினத்தில் தமிழ் தாய்மார்கள் கேள்வி



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு நீதி கோரி இலங்கையில் நீண்டகாலமாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கின் தாய்மார்கள், தமது அன்புக்குரியவர்களின் தலைவிதி வெளிப்படும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளனர்.

இராணுவத்திடம் சரணடைந்த தமது உறவினர்களுக்கு நீதி கோரி 8 வருடங்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என இவ்வருட சர்வதேச மகளிர் தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டித்த வடமாகாண தமிழ் தாய்மார்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

வடமாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பங்களிப்புடன் கடந்த சனிக்கிழமை (மார்ச் 8) தமிழ் தாய்மார்கள் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாமில் இருந்து, 15 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்திடம் தமது அன்புக்குரியவர்கள் கையளிக்கப்பட்ட வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்புப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

2017ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தன்று முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டத்தின் எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்தக் கோரியும், வீதியில் இறங்கிய தாய்மார், நீதிக்காக சர்வதேச தலையீட்டை வலியுறுத்தினர்.

மே 2009 இல் உள்நாட்டுப் போர் இரத்தக்களரியுடன் முடிவடைந்ததிலிருந்து, தமது கணவர், மகள்கள், மகன்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களை தமிழர் தாயகப் பிரதேச மக்கள் தேடி வருவதோடு, தொடர்ந்து போராடும் பெற்றோர்களில் குறைந்தது 350 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

52 பேரின் எலும்புகள் மீட்கப்பட்ட நிலையில் 2024ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி மூடப்பட்ட கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான உண்மையை வெளிப்படுத்த வேண்டுமெனவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கோரிக்கைகள் மற்றும் கோஷங்களை முன்வைத்து இந்த சர்வதேச மகளிர் தினத்தன்று ஆர்ப்பாட்ட பேரணியை அவர்கள் நடத்தினர்.

"எங்கே எங்கே எமது உறவுகள் எங்கே, சர்வதேசமே பதில் சொல்" போன்ற பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தாய்மார் "குற்றவாளிகளே நீதியை வழங்குவார்களா", நீங்கள் கொண்டுச் சென்ற எங்கள் பிள்ளைகள் எங்கே, போன்ற சிங்களத்தில் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியவாறு பேரணியில் செல்வதைக் காண முடிந்தது.





இலங்கையில் போர்க்குற்றம் புரிந்த அனைவரையும் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுத்து நீண்டகாலமாக தொடர் போராட்டங்களை நடத்தி வந்த அவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது அன்புக்குரியவர்களின் கதி என்ன என்பதை வெளிப்படுத்துமாறு சர்வதேச மகளிர் தினத்தில் அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடும்பமாக சென்று ஒப்படைக்கப்பட்ட உறவுகள்

பாதுகாப்பு தரப்பினரிடம் உயிருடன் ஒப்படைக்கப்பட்டவர்களையே தமிழ் தாய்மார் தேடி வருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவி கோகிலவாணி கதிராகமநாதன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் வலியுறுத்தினார்.

"மகளிர் தின போராட்டத்தை கறுப்புத் தினமாகத்தான் அனுஷ்டிக்கின்றோம். சிறுவர் தினம், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் என எத்தனையோ தினங்கள் வந்தாலும் நாங்கள் கையளித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. குடும்பம், குடும்பமாக உயிருடன் கையளிக்கப்பட்டவர்களையே கோரி நிற்கின்றோம். எங்களுக்கான நீதி வேண்டும். இந்த உறவுகள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். நாங்களும் நாளை இருப்போமே தெரியவில்லை. கையளித்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேசம் சொல்ல வேண்டும். இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்தோம், எட்டு வருடங்களாக பதிலளிக்கவில்லை."

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் தமது அன்புக்குரியவர்களுக்கு நீதியை வழங்குவதற்கான எந்த சமிக்ஞையையும் வெளியிடவில்லை எனவும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த வாரம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்பு குழுவில் (CEDAW) பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுடறிய போராடும் தமிழ் தாய்மார்கள் பற்றி எதுவும் கூறவில்லை.

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பான உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் தண்டனையின்மையை அனுபவிக்கவும் வரப்பிரசாதங்களைப் பெறவும் அனுமதித்தமைக்காக நாட்டை ஆளும் அரசாங்கங்கள் சர்வதேச அளவில் விமர்சிக்கப்பட்டுள்ளன.



# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யாழ்ப்பாணத்தில் மாத்திரமே கூட்டாக போட்டி என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (11-03-2025)

இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் யாழ் தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளதோடு வடக்கு கிழக்கில் ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் மாத்திரம் இணைந்து போட்டியிட உள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 10-03-2025 அன்று திங்கள் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிட உள்ளது.

யாழ்ப்பாணத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக அதன் அங்கத்துவக் கட்சிகள் இணைந்து போட்டியிட உள்ளோம்.

அதற்கான கட்டுப் பணத்தை செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.ஒட்டு மொத்தமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம் பெறும் வழக்கு விசாரணை மீள பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது.எனவே மன்னார் பிரதேச சபை தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராக உள்ளோம்.

ஜனநாகய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே ஒரு கூட்டாக இத் தேர்தலில் போட்டியிட உள்ளது.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது. எனினும் 9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை.9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம்.

எனினும் இக்கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் கட்சி தனித்து போட்டியிட உள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்து போட்டியிடுகின்றதா? இல்லையா என்று தெரியவில்லை. எனினும் இந்த அணியில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார்.

யாழ் தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம்.ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும் என்கிறார் அருட்தந்தை மா.சத்திவேல்

கனகராசா சரவணன்



தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் 11-03-2025 செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம மந்திரியும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவோடு ஆல்ஜசீரா ஊடகவியலாளர் நடாத்திய நேர்காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு விழுந்துள்ளது.

படலந்த வதை முகாமை மையமாக வைத்து அதற்கு காரணமான பிரதான சூத்திரதாரியான ரணிலின் "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பறிக்க வேண்டும்" எனும் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கையில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்களும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனக் கூறுவதில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஒரு குற்றவாளி இன்னும் ஒரு குற்றவாளியை விசாரிக்க முடியுமா? அவ்வாறு விசாரித்தாலும் அது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

தெற்கில் ரணிலிற்கு எதிரான மனநிலை பட்டலந்தை வதைமுகாமை பற்றியதாகவே மட்டும் இருப்பதும் உருவாகி இனவாத தன்மையை வெளிப்படுத்துகின்றது.

யுத்த காலப்பகுதி தொடர்பிலும் யுத்த இறுதி கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவை தொடர்பு கொள்ளும் அப்பேட்டியில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றிற்கும் பதில் அளிக்க ரணில் தடுமாறியதே நாம் அறிவோம். ஆனால் அதைப் பற்றி எல்லாம் கரிசனையோ அக்கறையோ இல்லாத மனநிலையையும் படலந்த குற்றங்களை முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனக்கொருவது பக்க சார்பானதும் இனி வாத மனநிலையை கொண்டதுமாகும்.

அல்ஜசீரா ஊடகவியலாளர் தெற்கிலும் வடக்கிலும் நிகழ்த்தப்பட்ட வதைகள், கொடூர கொடூரங்கள் யுத்தக் காலப்பகுதி தொடர்பிலும் குற்றங்கள் கேள்விக்கணைகள் தொடுகின்ற போது தெற்கு சார்ந்து மட்டும் சிந்திப்பதும் தமிழர் தேசத்தில் நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள் தொடரில் கருத்துக்கள் வெளியிடாது இருப்பது இரண்டு நாடுகள் என்பதையே காட்டி நிற்கின்றது.

இரண்டு நாடுகள் என்றாலும் அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுப்பது ஒவ்வொருவரினதும் தார்மீக பொறுப்பாகும். தற்போதும் அதனை காண முடியாமல் இருப்பது இனவாத அவல நிலையையே மீண்டும் உணர்த்துகின்றது.

பட்டர் அந்த முகாமோடு தொடர்புபட்டவர்கள் அதற்கு துணை நின்ற பாதுகாப்பு தரப்பினரும் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களே அதில் மாற்று கருத்து இல்லை காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும். உண்மை முழு நாட்டுக்கும் தெரிய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 1988-89 காலப்பகுதியில் மாத்தலை பிரதேசத்தில் இராணுவத்திற்கு தலைமை தாங்கிய போது அங்கு கொண்டு புதைக்கப்பட்டவர்களின் சமூக புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

தெற்கில் மேலும் பல சமூக புதைகுழிகள் தொடர்பான அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்ட போதும் அது தொடர்பில் தற்போதைய தேசிய மக்கள் சக்தியான மக்கள் முன்னணி வாய் திறக்காமல் அமைதி காத்து தற்போது ரணில் மீது விசாரணை எனக் கூறுவது அரசியல் நாடகமாக அமையக்கூடாது.

ஊடகவியலாளர் திஸ்சநாயகத்தின் உதவியோடு 1988-89 காலப்பகுதியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளை தூக்கிக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நோக்கி ஓடியதை மறக்க முடியாது.

அதே மகிந்த திஸ்ச நாயகத்திற்கு 20 வருட தண்டனையை பெற்றுக் கொடுத்ததும் சர்வதேச தலையீட்டின் காரணமாக அவர் விடுதலை பெற்றுதும் மறக்க முடியாது.

படலந்த கொலைகளை காரணம் காட்டி ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இது தொடர்பில் சந்திரிக்கா பண்டார நாயக்கரும் மகிந்த ராஜபக்சவும் அமைதி காத்தமை கொலை குற்றவாளிகளை பாதுகாத்ததாகவே கருதப்பட வேண்டும். அவர்களும் ரணிலுக்கு கொலை குற்றவாளிகளே, தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

சந்திரிக்கா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய யுத்தம் அவர்களால் புரியப்பட்ட கொலைகள் படலந்த விடயத்தை விசாரணைக்கு உட்படுத்தாததை மறைத்து விட்டது.

தெற்கு இனவாத யுத்தத்தில் மூழ்கி இருந்தது.இனவாதம் தெற்கின் கண்களை மறைத்து நீதியை புதைத்து விட்டது என்றும் கூறலாம்.

இவ்வாறு மறைத்தவர்களும் பட்டலந்தை கொலையாளிகளே. அல் ஜாசீரா ஊடகவியலாளர் கேள்விகளை கேட்கவில்லையேல் தற்போதும் நீதிக்கான குரல் எழுத்திருக்காது.

தமிழர்களை பொறுத்தவரையில் ரணிலுக்கு எதிரான விசாரணை எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடுதலை முன்னணி நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

தண்டிக்கப்பட வேண்டியவர்கள் சந்திரிகாவையும் மகிந்தவையும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு பலவந்தமாக தள்ளி தமது முன்னணி உறுப்பினர்களையும் சாதாரண கிராமிய இளைஞர்களையும் இனவாதத்திற்குள் தள்ளி தமிழர்களை இனப் படுகொலை புரிந்த இவர்களும் தண்டனைக்குரியவர்களே.

தற்போதைய ஆட்சியாளர் ரணிலுக்கு எதிராக விசாரணை நடத்துவதாக கூறுவது போல் தங்கள் மனசாட்சியை தொட்டு தங்களுக்கு எதிராக விசாரணை நடத்தினால் மட்டுமே இவர்களின் கிளீன் சிறீலங்காவிற்கு நீதி கிட்டும் இல்லையேல் அதுவும் போலியே.

தற்போதைய ஆட்சியாளர் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தம் தொடர்பாக உள்ளக விசாரணை என்பதும் சர்வதேசத்தின் எந்த தலையீட்டையும் ஏற்க மாட்டோம் என்று கூறுவதற்கும் காரணம் இவர்கள் மீதும் கொலை குற்றச்சாட்டுகள் விழும் என்பதன் காரணமாகவே.

கடந்த ஆட்சியாளர்களை போல பாதுகாப்பு படையினரை பாதுகாக்கும் நோக்கமேயாகும். சர்வதேச விசாரணைக்கு மறுப்பு தெரிவிப்பவர்களும் கொலை குற்றவாளிகளே.

இலங்கை வரலாற்றில் எல்லா காலப்பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்ட இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இதய சுத்தியோடு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதற்கான தகுதி இலங்கைக்கு இல்லை என்பதே தமிழர்களின் கடந்த கால நிகழ்கால அனுபவமாகும். அதனாலையே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் யுத்த குற்றம் விசாரிக்கப்பட வேண்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அரசியல் நீதி கிடைக்க வேண்டும் என்று தமிழ் தொடர்ந்து கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்று வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

இதுவரை காலமும் பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக அமைதி காத்தவர்கள் எல்லாம் இன்று வாய் திறக்கிறார்கள் எனில் அதற்கு அல் ஜஸீரா சர்வதேச ஊடகமே காரணமாகும்.

அதைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இன படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள், கொலையாளிகள், இனவாதிகள் என்பதை உண்மை என அந்த அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

# அநுராதபுர வைத்திசாலையில் பணியாற்றும் தமிழ் பேசும் மருத்துவர் மீதான பாலியல் வன்கொடுமையை கண்டித்து வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு



(ந.லோகதயாளன்.)

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணியாற்றிய பெண் வைத்தியரைக் கத்திமுனையில் பாலியல் வன்கொடுமை புரிந்தவரை கைது செய்ய வலியுறுத்தி வைத்தியர்கள் நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நாட்டின் சகல வைத்தியசாலையின் வைத்தியர்கள் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவித்தனர்.

அநுபுரதம் வைத்தியசாலையில் பணியாற்றிய தமிழ்ப் பெண் வைத்தியரை பாலியல் வன் கொடுமை புரிந்ததாக நம்ப்பப்படும் இராணுவச் சிப்பாய் எனக் கருதப்படுபவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி இடம்பெறவுள்ள இன்றை போராட்டத்தில் வைத்தியர்கள் வித்தியாசமான வகையில் ஈடுபட்டனர்.

இது இவ்வாறிருக்க, கைதான நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும், ஏற்கனவே குறித்த நபர் போதைப்பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பிலான குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் திங்கள் கிழமை இரவு 32 வயது பெண் வைத்தியரை வல்லுறவுக்கு உட்படுத்திய நபர் கல்நேவயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும், ஏற்கனவே குறித்த நபர் போதைப்பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பிலான குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் தெருநாய்களை பிடித்து வளர்க்கும் "இரக்கமுள்ள" குடும்பம் ஒன்று

## குறித்த குடும்பத் தலைவர் நாடளாவிய ரீதியில் நடைபயணம் மேற்கொண்டு நாய்களின் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்ற ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக தெரிவிப்பு








யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் வசித்துவரும் குடும்பம் தெருவோரத்தில் அநாதரவாக நிற்கின்ற நாய்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று அவற்றினை வளர்த்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் இரண்டு நாய்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணியானது தற்போது 39 நாய்கள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நாய்களை தங்களது சொந்த பிள்ளைகள் போலவே வளர்த்து வருகின்றனர்.

அயல் வீட்டில் உள்ள ஒருவர் அவர்கள் வளர்க்கின்ற நாய் ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய நிலையில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் அவர்களது நாய்கள் காணாமல் போகின்ற சந்தர்ப்பங்களில் ஜோசியம் பார்த்தல், சமூக ஊடகங்கள் மூலம் பதிவுகளை பகிர்தல் மூலம் நாய்களை கண்டுபிடிக்கின்றனர்.

குறித்த குடும்பத் தலைவர் எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் நடை-பயணம் ஒன்றினை மேற்கொண்டு, பலரது கையொப்பங்களை பெற்று நாய்களின் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்றுவதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த அற்புதமான குடும்பத்தையும் குடும்பத் தலைவர் மற்றும் தலைவி ஆகியோரை பல குடாநாட்டு மக்கள் பாராட்டியுள்ளனர்.

# கிளிநொச்சி. சந்தை கடைத் தொகுதி விவகாரம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி. கோரிக்கை!




கிளிநொச்சி பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதி விவ-காரம், கரைச்சி பிரே-தச சபைக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வரையில் ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீ-காந் பன்னீர்செல்வம், செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரத்தில் இல்லாததின் விளைவை கிளிநொச்சி வர்த்தகர்கள் உணர்ந்திருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் 12ம் திகதி அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், ”கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்களினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுச் சந்தை வளாகத்தில் உலக வங்கியின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ள கடைகளை, சுற்று நிருபங்களுக்கு அமைவாக கோரல் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு கரைச்சி பிரதேச சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி பொதுச் சந்தை என்பது யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள்குடியமர்ந்த காலப் பகுதியில் சந்தை அமைக்கப்பட்டுள்ள பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில், அதனை விடுவித்த எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இடம்பெயர்விற்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு வர்த்தக நிலையங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுத்திருந்தார்.

அப்போதும் அரச அதிகாரிகளினால், அரச சுற்று நிருபங்களுக்கு அமையவே கடைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

எனினும் அதனை ஏற்றுக்கொள்ளாத எமது செயலாளர் நாயகம், அரச சுற்றிக்கைகள் ஒழுங்கு விதிகள் போன்றவை மக்களின் நலன்களை முன்னிறுத்தியே உருவாக்கப்படுகின்றன. அனைத்தையும் இழந்த நிலையில் மீள்குடியேறிய மக்களை சுற்றறிக்கைகளின் பெயரால் மேலும் துன்பப்படுத்த முடியாது என்ற கருத்தை முன்வைத்துடன் அப்போதைய ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் கலந்துரையாடி எந்தவிதமான முற்பணங்களும் இன்றி குறித்த கடைகள மக்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே, தற்போது குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற மக்கள் நிச்சயமாக எங்களுடைய செயலா-ளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா ஆட்சி அதிகாரத்தில் இல்லாததன் விளைவை தற்போது உணர்ந்திருப்பார்கள்.

எதுஎப்படியோ, தற்போது இந்த விவகாரம் நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டும். சுற்று நிருபங்களையும் சந்தை வர்த்தகர்களின் எதிர்பார்ப்புக்களையும் சமரசம் செய்து இந்த விவகாரத்தை தீர்ப்பதற்கு பிரதேச சபை அதிகாரிகளுக்கு சங்கடங்கள் இருக்குமாயின், இன்னும் இரண்டு மாதங்களில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வரையில் குறித்த விவாகரம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறத்துகின்றது” என்று தெரிவித்தார்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் [வரலாறும் மரபும்]

வரலாறும் மரபும் 1137

## கதிஉகாமம் முத்துலிங்கசுவாமி கோயில் [சிவன்கோயில்] கதிஉகாமம்

*“ ஆகமத்தின் உட்பொருள் அகண்டமூலம் ஆதலால்*
*தாகபோக மின்றியே தரித்ததற் பரமும் நீ*
*ஏகபாதம் வைத்தனை உணர்த்தும் அஞ்செழுத்துளே*
*ஏகபோகம் ஆகியே இருந்ததே சிவாயமே. ”*

இந்தவகையில் இவ்வாறான கோயில்களாக திருமூலர் சமாதி காணப்பட்ட சிதம்பரம், இராமதேவர் சமாதியடைந்த அழகர்மலை, கும்பமுனி சமாதியடைந்த ஸ்ரீரங்கம், இடைக்காடர் சமாதியடைந்த திருவண்ணாமலை, தன்வந்திரியின் சமாதியிடமான வைத்தீஸ்வரன்கோயில், வான்மீகரின் சமாதியிடமான எட்டுக்குடி, குதம்பைச் சித்தரின் சமாதியிடமான மயிலாடுதுறை, நந்திதேவரின் சமாதியிடமான வடகாசி, கமலமுனியின் சமாதியிடமான திருவாரூர், போகரின் சமாதியிடமான பழனி, மச்சமுனியின் சமாதியிடமான திருப்பரங்குன்றம், கொங்கணச்சித்தரின் சமாதியிடமான திருப்பதி, பதஞ்சலியின் சமாதியிடமான இராமேஸ்வரம், கோரக்கரின் சமரியிடமான வடக்குப் பொய்கை நல்லூர், சுந்தரானந்தரின் சமாதியிடமான மதுரை, பாம்பாட்டிச்சித்தரின் சமாதியிடமான மருதமலை, கருவூர்ச்சித்தரின் சமாதியிடமான கருவலூர், அகப்பேய்ச்சித்தரின் சமாதியிடமான திருவையாறு, ஐந்து சித்தர்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருச்செந்தூர் இவற்றோடு முத்துலிங்கசுவாமிகளின் சமாதியிடமான கதிர்காமம் ஆகிய கோயில்கள் இன்றும் பக்தர்களின் துயர்துடைத்து அமைதியையும், ஆனந்தத்தையும் கொடுப்பதற்கு, இங்குள்ள சித்தர் சமாதிகளும் ஒரு காரணமாக விளங்குவதாக ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எல்லா இடங்களிலும் உள்ள எல்லாக் கோயில்களுமே இறைவன் உறையும் இடமல்லவா? அப்படியிருக்க, சில ஊர்களிலுள்ள கோயில்கள் மட்டும் அதீத சக்தி கொண்டவையாக, தெய்வ சாந்நித்தியம் கொண்டவையாக விளங்கக் காரணம் என்ன? இதற்குரிய விடையை மெஞ்ஞானிகள் மிக இலகுவாக எடுத்தியம்பியுள்ளனர். இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளான் எனினும், ஒருசில இடங்களில் மட்டும் அருளொளியும், பக்தர்களின் வேண்டுதலும் அதற்குரிய பலனும் இலகுவாகக் கிடைப்பதற்குரிய காரணம் என்ன? பசுவின் உடல் முழுவதும் இரத்தம் பரவி இருப்பினும், அதுவே பாலாக மாறிவரினும், பசுவின் மடியில் மட்டுந்தான் பால் சுரக்கின்றது. சித்தர்கள் வாழ்ந்து மறைந்த கோயில்களும் பசுவின் பால்மடி போன்றவையே என ஞானியர் விளக்கியுள்ளனர். அவ்வாறே காலதேச வர்த்தமானங்களுக்கமைய கோயில்கள் அமையும் இடங்களில் காலகாலங்களுக்கு முதல் சித்தரும், ஞானியரும் வாழ்ந்து மறைந்திருக்கலாம் என்ற கூற்றிலும் மாறுபாடு கிடையாது. இறைநியதிப்படியே கோயில்கள் எங்கெங்கு அமைந்துள்ளதோ அங்கெல்லாம் வாழ்ந்து மறைந்த சித்தர்களின் அருளொளி இருந்திருக்க்கூடும்.

இலங்கையிலுள்ள கதிர்காமம் பல சமயத்தவர்களும் போற்றும் கோயிலாகப் போற்றப்படுகின்றது. நிலவளம், நீர்வளம், மலைவளம் என அனைத்தும் கொண்ட அருள்மிகுந்த கோயிலாகப் போற்றப்படும் கதிர்காமத்தில் எழுந்தருளியுள்ள கந்தப்பெருமானை, கதிர்காமப் பெருமாளே என, அருணகிரிநாதர் போற்றியுள்ளார். இக்கோயிலின் பெருமைக்கும் வாழ்த்துக்கும் சித்ததர்களே காரணமாகக் காணப்படுகின்றனர். இங்கு வாழ்ந்த சித்தர்களுள் முத்துலிங்கசுவாமிகள் முக்கிய சித்தராக வாழ்ந்துள்ளார்.

எங்கும் நிறைந்த இறைவனின் அருளை ஆலயங்கள் மூலம் இலகுவாகப் பெறமுடியும். அந்தராத்மன் என்றவாறு, வாழ்வின் உண்மை நிலையை அறிந்தோர் இதயக் கமலத்திலும் இறைவன் உறைகின்றான். எனினும், எல்லாமாக விளங்குகின்ற சக்தியை மனதிடை நிறுத்தி வணங்க, உருவவழிபாடு அவசியமாகின்றது. இந்நிலையில் அவரவர் சிந்தனைக்கேற்ப இறைவடிவங்களை ஞானிகளும், ஆன்றோர்களும் உருவாக்கியுள்ளனர். வாழும் சூழலுக்கேற்ப வழிபாட்டு முறைகள் வகுக்கப்பட்டன. இவ்வாறே ஆரம்ப காலத்தில் வகுக்கப்பட்ட முறைகளுக்கேற்ப முருக வணக்கமும் தோற்றம் பெற்றது. முருக வழிபாட்டிலே முருகனின் குறியீடாக கைவேல் காணப்படுகின்றது.

பதினெண்மேல்கணக்கு நூல்களிலே, சேயோன் என்றும், கந்தர் அலங்காரத்திலே சேந்தன் என்றும், பரிபாடலிலே கவின், செவ்வேள் என்றும் போற்றப்படும் அழகும் ஆற்றலும் கொண்ட முருகன் சிவனுடைய புதல்வனாகவும், கொற்றவை மைந்தனாகவும் பாடப்படுவதை,

*“ மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே*
*வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ*
*இழையணி சிறப்பிற் பழையோன் குழவீ... ”*

ஏன்ற பாடல்வரிகள் மூலம் முருகனின் வரவு கூறப்பட்டுள்ளது.

அருணகிரியாரால் கதிர்காமப்பெருமாளே என போற்றப்பட்ட முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலமாக கதிகாமம் போற்றப்படுகின்றது. தமிழ்ப்புலவர் “கதிர்வேலுக்கெதிர் வேலுமில்ல” என முருகனைப் போறற்றியுள்ளனர். தட்சிண கைலாய மான்மியத்திலே கதிர்காமம் அருளொளியும், அன்பும் கொண்டதாக வருணிக்கப்பட்டுள்ளது. கதிர் என்றால் ஒளி. காமம் என்றால் அன்பு எனப் பொருள் கொள்ளமுடியும். இலங்கையின் அம்பாந்தோட்டைப்பகுதியில், திசமகாரகம என்ற பிரதேசத்திலிருந்து 19 கிலோமீற்றர் தொலைவிலுள்ள காட்டுப்பகுதிக்குள், மாணிக்ககங்கை ஆற்றங்கரையில் வரலாற்றுப்புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலயம் அமைந்துள்ளது. தற்காலத்தில் பல்வேறுவகையிலும் புத்தமயமாக்கப்பட்டுள்ள இப்பகுதி ஆதியிலிருந்த இயற்றை அழகை இழந்து நவீனமயமாக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் என்று தமிழர்களும், கதரகம, தெவியன்கோட்ட என சிங்கள மக்களும் இதனை அழைப்பர். இக்கோயில் இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களும் வணங்கும் ஒரு கோயிலாகவும் காணப்படுகின்றது.

***வளரும்...***

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா
PUNGUDUTIVU OLD STUDENTS" ASSOCIATION - CANADA

வருடாந்த பொதுக்கூட்டம் 2025

காலம்: 22-03-2025 Saturday 9:30AM
இடம்: Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Toronto, ON M1S 4A4

பொதுச்சபையினர் புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்தல், கணக்கறிக்கை சமர்ப்பித்து சபையிடம் ஒப்புதல் பெறுதல், போன்ற விடயங்கள் முடிவு செய்யப்படவுள்ளன. எம்மண்ணின் எதிர்கால நலன்கள் மற்றும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான செயற்திட்டங்கள் ஆராயப்படவுள்ளன. தயவு செய்து அனைவரும் கலந்து, தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கி சிறப்பிக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் வருகைக்கு நன்றி!

தொடர்புகளுக்கு
647-547-0781 - posacanada@gmail.com - Pungudutivuworld.com

திரு. உதயராசா குணராசா (தலைவர்) 416-400-5993
திரு. கயிலநாதன் கோபாலபிள்ளை (செயலாளர்) 647-688-3030
திருமதி. கவிதா செந்தில் (பொருளாளர்) 416-618-3651

*(11 பக்கத் தொடர்ச்சி)*

நாங்கள் விசாரணைக்காக எல்லா வதைக்கூடங்களிற்கும் சென்றோம். அனைத்தினதும் தகவல்களை சேகரித்து இருந்தோம். ஆனால் "படலந்தவிற்கு" மாத்திரமே வழக்கு தொடுக்கப்பட்டது.

மற்றைய வதைக்கூடங்களிற்கு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

அதே போன்று JVPயினர் வாக்களிக்க சென்ற 5 பேரை கொலை செய்து வாக்களிக்கும் இடத்திலேயே போட்டனர்.

இதுபோன்று சுமார் 225 பேர் கொலை செய்யப்பட்டனர்.

- ஊடகவியலாளர்: இவ்வளவு நடந்த பின்பும் ஏன் இவர்களுக்கு எதிராக சட்டம் எதையும் செய்யவில்லை?

- ஏ.பீ கருணாரத்ரன: நான் நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க செல்ல இருந்தேன். ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க "போக வேண்டாம்! என பயமுறுத்தினார். இருந்தாலும் நான் போனேன். போகும்போதே டக்ளஸ் பீரிஸ் பெயரை மாற்றி வெளிநாட்டிற்கு தப்பிச் சென்று விட்டார்.

இரண்டாவது பிரதிவாதியான நிஷங்க என்பவர் வீட்டிலேயே துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்து போனார்.

- ஊடகவியலாளர்: ரணில் விக்கிரமசிங்க தற்போது அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பது போன்று கூறி வருகிறாரே?

- ஏ.பீ கருணாரத்ரன: இன்று ரணில் விக்கிரமசிங்க அதைத் தருகிறேன். இதை செய்வேன் என்று கதை சொல்லித்திரிகிறார்.

ஆனால் அவரின் பழைய வரலாறு கொலையையும், வதையையும் ஊக்குவித்த ஒருவராகவே காணப்படுகிறார். புதிதாக அவர் ஒரு கூட்டத்தில் இதைக் கூறினார். அப்போது எனக்குப் பழைய (1980 களின் இறுதி) "சித்திரவதைக்கூடங்கள்" ஞாபகத்திற்கு வந்தது.

- ஊடகவியலாளர்: பழைய வரலாற்றை தெரியாத ஒருவருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

- ஏ.பீ கருணாரத்ரன: நீங்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிக்க முன்னர் 88/89 களில் என்ன நடைபெற்றது என்பதைத் தேடிப் படியுங்கள். பின்னர் புத்திசாலித்தனமாக வாக்களியுங்கள்.

- பிற்குறிப்பு:

இவர் இந்த நேர்காணலில் கூறியது போல் JVP இனரால் தேசிய அடையாள அட்டைகள் திருடப்பட்டது உண்மை தான். தற்பாதுகாப்பிற்காக சில கொலைகள் செய்யப்பட்டன.

நானும் 2000 ஆவது ஆண்டுக்கு பிற்பாடு பிறந்தவன். நானும் இவர் சொன்னது போல் வாக்களிக்க முன் பழைய அரசியலில் 88/89 உண்மைத்தன்மைகளை ஓரளவு தேடிப் படித்தேன்.
எனக்குத் தெரிந்த மட்டில் JVP இன் பெயரை வைத்து அவர்களின் கொள்கைக்கும்
அரசியல் கோட்பாடுகளிற்கும் அப்பால் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற ஒரு குழு JVP பெயரை வைத்து பல அப்பாவிகளை
கொலை செய்ததையும், இந்த குழுவில் இந்திய "ரோ" அமைப்பினர் சிலரும்
அரசினால் மறைமுகமாக கொண்டுவரப்பட்டு அராஜகம் செய்தாக பல நடுநிலை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியாளர்களின் அறிக்கைகளில் எழுதப்பட்டிருத்ததை வாசித்தேன்.

அன்றைய ஊடகங்களும் அரசாங்கம் எதைச் சொன்னதோ அதையே மக்களுக்குக் காட்டின & கூறின. அடாவடித்தனத்திற்கும், ஊழலுக்கும் எதிராகக் குரல் கொடுத்ததால் "கொடிய தீவிரவாதிகள்" என JVP யினரை முத்திரை குத்த அரசாங்கம் செய்த
செயலாகவே பெரும்பாலான ஊடகவியலாளர் எழுதியிருந்தனர். இது தொடர்பாக இன்னும் ஆராய்ந்து எழுதவுள்ளேன்.

எது எப்படியோ இந்த வதை முகாம்களில் கொல்லப்பட்ட அப்பாவி இளைஞர்களுக்கு நீதியை நிலைநாட்டுவது தற்கால அரசாங்கத்தின் பொறுப்பாகும்
சிலர் நினைக்கலாம் நான் JVPயை சுத்தப்படுத்த (வெள்ளையடிக்க) முனைவதாக. எழுதுவது என் விருப்பம். வாக்களிப்பதும் எனது உரிமை. விமர்சிப்பதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு AI தொழிநுட்ப மூலம் மொழி
பெயர்ப்பு: Usaidh Muaaz கடும் தமிழில் இருந்து நடைமுறைத் தமிழுக்கு மொழி பெயர்ப்பு மற்றும் பதிவு
ஆக்கம்: இரா.சொ. லிங்கதாசன், டென்மார்க்

# ஈழத்தில் பதிகொள் முருகன் (இன்னிசை வெண்பா)

*மாவை முருகன் மலரடி சென்றுமே!*
*தேவை எதுவெனத் தேம்பி அழுதிடக்*
*கோவையாய் வந்த கொடுநோய் முழுவதும்*
*ஆவிபோல் நீங்கி விடும்.*

*நல்லூர் நகரிலே நல்லதோர் காவலாய்*
*செல்வச் செழிப்புடன் சேமம் புரிகிற*
*வல்லமை பெற்ற விநாயகன் தம்பியே!*
*பொல்லாப் பிழைகள் பொறு.*

*சன்னிதிக் கந்தனே சன்னத வேலனே!*
*அன்னம் வழங்கி அடியார் பசிதீர்க்கும்*
*பார்வதி மைந்தனே பாவம் அகற்றியே!*
*சோர்விலா வாழ்வு வழங்கு.*

*கதிர்காமக் கந்தனே காவடிப் பக்தா*
*விதியின் வசத்தால் வினைகள் புரிந்தோர்*
*மதியைத் திருத்தி மறுவாழ்வு நல்கி*
*அதிபனாய் வாழ அருள்.*

*சேமம் – – –நல்வாழ்வு அதிபனாய் – – – தலைவனாய்*

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***







# இவ்வார ராசிபலன்

**14-03-2025 வெள்ளி தொடக்கம் 20-03-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 3,2,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிரஷ்ட எண்: 2,5,9,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்யம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைக்கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,9,7,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z




**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்யம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையக்கடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி, தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,6,8,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,1,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீர்கள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும்.

**(தொடர்ச்சி 22 பக்கம்)**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** உடல்நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,9,1,2

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மகிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5

அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர். மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிறர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

# திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவியேற்கிறார்



கண்டி மேல் நீதிபதி சுமுது பிரேமச்சந்திரா, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பிரியந்த பேர்னாண்டோ மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகிய மூவருமே 12ம் திகதி காலை 9 மணிக்கு பதவியேற்கின்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீதிவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் சுமார் 28 ஆண்டுகள் நீதிச் சேவையில் கடமையாற்றியுள்ளார்.

1967ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி யாழ்ப்பாணம், வடமராட்சி, துன்னாலையில் அன்னலிங்கம் (முன்னாள் அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர்) மகாலக்ஷ்மி தம்பதியினருக்கு மகனாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர் பிறந்தார்.

துன்னாலை அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்து சட்டத்துறையில் கல்வி கற்று சட்டத்தரணியானார்.

1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நீதித்துறை அலுவலராக நீதிபதி நியமனம் பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களில் ஒரே தடவையில் நீதிவானாகவும் (போர் இடம்பெற்ற காலப்பகுதியில்) மல்லாகம், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதியாகக் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 14 ஆண்டுகள் நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த அன்னலிங்கம் பிரேமசங்கள் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றினால் அதிகரிக்க முன்னர்) பின்னர் 2013ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராக பதவி வகித்ததுடன் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி முதல் மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு என மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் சுமார் 13 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில் 27 ஆண்டுகள் நீதிச் சேவையில் முதல் நிலை நீதிபதியாகத் தொடர்ந்த நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், தலைமை நீதியரசர் முறுது பெர்னான்டோ தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையுடனும் சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலுடனும் ஜனாதிபதியினால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படுகிறார்.

2000ம் ஆண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிவானாக செயற்பட்ட காலத்தில் மிருசுவிலில் ஐந்து வயது சிறுவன் உட்பட எட்டுப்பேரை சுட்டு படுகொலை செய்த வழக்கின் விசாரணைகளை உரியவகையில் முன்னெடுத்தமைக்காக அந்த வழக்கின் தூக்குத் தண்டனை பெற்ற இராணுவச் சிப்பாயின் மேன்முறையீட்டை விசாரணை செய்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்த தீர்ப்பில் உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கருக்கு பாராட்டை கோடிட்டுக் காட்டியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS




**OUR SERVICE**

**RESIDENTIAL, COMMERCIAL**

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CONTACT US

**NESAN**
Subramaniam
**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
First National Financial LP
TD Canada Trust
Manulife
National Bank
Desjardins
RFA
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

உதயம் 1510 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 14, 2025

# யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் தெருநாய்களை பிடித்து வளர்க்கும் "இரக்கமுள்ள" குடும்பம் ஒன்று

## குறித்த குடும்பத் தலைவர் நாடளாவிய ரீதியில் நடைபயணம் மேற்கொண்டு நாய்களின் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்ற ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக தெரிவிப்பு



யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் வசித்துவரும் குடும்பம் தெருவோரத்தில் அநாதரவாக நிற்கின்ற நாய்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று அவற்றினை வளர்த்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் இரண்டு நாய்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணியானது தற்போது 39 நாய்கள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நாய்களை தங்களது சொந்த பிள்ளைகள் போலவே வளர்த்து வருகின்றனர்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

# விடுதலைப் புலிகளின் தலைவரின் வீரச்சாவை அறிவித்தவர்கள் மீது பொன் சுதன் என்பவர் காட்டும் சீற்றம்!



## இவர்களை எமது தேசிய ரீதியான பயணத்தில் இருந்து அகற்ற வேண்டுமெனவும் தெரிவிப்பு.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் வீரச்சாவை அறிவித்தவர்கள் மீது பொன் சுதன் சீற்றம் கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீரச்சாவை அறிவித்தவர்கள் இறுதி போரில் மக்களை சுட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பி ஓடியவர்களே என பொன் சுதன் தெரிவித்துள்ளார்

11-03-2025 அன்று ) வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள சமூகமாற்றத்திற்கான ஊடக மையத்தில் வைத்தே மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# விழாக் கோலம் பூணுகின்றது கச்சதீவு புனித அந்தோணியார் தேவாலயம்

## அந்தோணியாரின் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாட்டுப் பணிகளில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.



இலங்கை இந்திய எல்லையில் உள்ள கச்சதீவு புனித அந்தோணியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் மார்ச் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டுப் பணிகளிலேயே தற்போது நூற்றுக்கணக்கான இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் அனைவரது பார்வையில் விழாக் கோலம் பூணுகின்றது கச்சதீவு புனித அந்தோணியார் தேவாலயம் என்றே சொல்லவேண்டும் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

கச்சதீவு உற்சவத்தில் இலங்கை இந்திய யாத்திரிகர்கள் 9 ஆயிரம் பேர் பங்குபற்றவுள்ள நிலையில் இவர்களிற்கான தற்காலிக இறங்கு தளம், தங்ககம், பூசை மண்டபம் என்பவற்றுடன், உணவு ஏற்பாடு முதல் நீர் விநியோகம் வரையில் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகும்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# தமிழ் நாட்டின் சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கி கௌரவித்த நந்தவனம் பவுண்டேசன்







சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பல்துறைகளில் சாதித்து வரும் பெண்களை கௌரவிற்கும் விதமாக தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் நந்தவனம் பவுண்டேசன் மூலம் சாதனைப் பெண் என்ற விருது வழங்கப்படுகிறது 2025 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழால் லிம்ரா பேக்ஸ் பிரவேட் லிமிடெட் ஆதரவுடன், சென்னையில் 9 - 3 - 2025 அன்று விஜய்பார்க் ஹோட்டலில் சிறப்பாக நடை பெற்றது. நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், பொருளாளர் பா. தென்றல் அனைவரையும் வரவேற்று நோக்கவுரை ஆற்றினார். மேலும் நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், இலங்கை தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் , வீரகேசரி பிதம ஆசிரியர் ஸ்ரீகஜன், மதுரை தங்கமயில் ஜீவல்லரியில் முதன்மை அதிகாரி வி. விஸ்வாஸ் நாயரன். சென்னை விட்டில் ஃப்ளவர் பள்ளிக் குழுமத்தின் தலைவர் எஸ். ஜான்சேவியர், உலகளாவிய தழிப்பள்ளியின் இணை நிறுவனர் ராதிகா ஹரீஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சாதனைப் பெண்களுக்குவிருதுகள் வழங்கி வாழ்த்தினர்.